
# கோபுரம்

தகவல் இதழ்

ஜய வருடம் - சித்திரை 2014



புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

யாழ்ப்பாணம் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற தைப்பொங்கல்,
விசேட முத்திரை வெளியீட்டு நிகழ்வு
















# கோபுரம்

## தகவல் இதழ்


ஜய வருடம் – சித்திரை 2014

மலர் : 23 இதழ் : 01



மலர்க்குழு

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்

**திரு. ம. சண்முகநாதன்**
உதவிப் பணிப்பாளர் (இந்து ஆலயம், இந்து ஆராய்ச்சி)

**திருமதி ஹேமலோஜினி குமரன்**
உதவிப் பணிப்பாளர் (இந்து அறநெறி, இந்து விவகாரம்)

**திருமதி தேவகுமாரி ஹரன்**
சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர்

**திரு. அ. கருணாகரன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர் (ஆய்வு)



வெளியீடு
**ஆய்வுப் பிரிவு**
**இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**
*இல. 248 1/1, காலி வீதி, கொழும்பு - 04*
*தொலைபேசி : 2552641/ 2552643*
*தொலைநகல் : 2552825, மின்னஞ்சல் :* hindudir@yahoo.com

# திணைக்களச் செய்திகள்

கடந்த வருட இறுதிக் காலாண்டுச் செயற்திட்டங்களும்
இவ்வருட முதல் காலாண்டுச் செயற்திட்டங்களும்

## இந்து அறநெறிப் பிரிவின் செயற் திட்டங்கள்

இந்து அறநெறிப்பாடசாலைகள் நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவருகின்றன. இதன் முன்னேற்றத்திற்கு ஊன்று கோலாக இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் திகழு கின்றன. இப்பாடசாலைகளைப் பதிவு செய்து மேற்பார்வை செய்வதுடன் அதன் செயற் பாடுகளுக்குத் தேவையான உதவிகளையும் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இச்செயற்திட்டத்தின் கீழ் மாவட்டங்கள் தோறும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர் களுக்கு கருத்தரங்கு நடத்துதல், மாணவர் களுக்கான சீருடை விநியோகம், ஆசிரியர் களுக்கான நூல்கள் வாங்குவதற்கான கொடுப்பனவுகள், இந்துசமயப் பொது அறிவுப் போட்டிப்பரீட்சையும் பரிசளிப்பும், சொற்பொழிவுகள் நடாத்துதல், புதிதாக அறநெறிப்பாடசாலைகளைப் பதிவுசெய்தல், இசைக்கருவி, தாளம், சுருதி விநியோகம், நூல்கள் அச்சிடல், தளபாடக் கொள்வனவு, பண்ணிசை, யோகாசனம், நடனம் போன்ற விசேட வகுப்புக்கள் நடத்துதல் போன்ற பல வேலைத்திட்டங்கள் இவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

இத் திட்டங்கள் மூலம் அறநெறி பாட சாலைகளை வளர்த்து நல்லதொரு இளைய சமுதாயத்தை உருவாக்க வழிவகுப்பதே இதன் நோக்கம் ஆகும். இவ்வகையில் கடந்த வருட இறுதிக் காலாண்டுக்குரிய வேலைத் திட்டங்களும் இவ்வருட முதலாம் காலாண்டுக்குரிய வேலைத் திட்டங்களும் பின்வருமாறு.

### இந்துசமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையும் பரிசளிப்பு வைபவமும்

அறநெறிப் பாடசாலை மாணவர்களிடத்தில் இந்து சமயம் தொடர்பான அறிவை விருத்தி செய்யும் பொருட்டு மாணவர்களிடையே இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படுகிறது. இப் பரீட்சையானது எமது திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட பாடநூல்களை அடிப்படை யாக வைத்து நடாத்தப்படுகிறது. அகில இலங்கை ரீதியாக சுமார் 63,000 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இப் பரீட்சையானது 07.09.2013ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதில் 35,000 மாணவர்கள் தோற்றியுள்ளனர். இப் பாடசாலையில் அதிஉயர் புள்ளிகள் பெற்று தேசிய மட்டம், மாவட்ட மட்டங் களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கடந்த 07.12.2013 ஆம் திகதியன்று கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்ட பத்தில் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் அதிஉயர் புள்ளிகள் பெற்று தேசிய, மாவட்ட மட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரங்கள் அடங்கிய சிறிய கையேடு ஒன்றும் வெளி யிடப்பட்டது. இதன் அடிப்படையில்

மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தை 152 மாணவர்களும், இரண்டாமிடத்தை 132 மாணவர்களும், மூன்றாமிடத்தை 104 மாணவர்களும் பெற்றுக்கொண்டனர். தேசியமட்டத்தில் முதலாமிடத்தை 33 மாணவர்களும், இரண்டாமிடத்தை 07 மாணவர்களும், மூன்றாமிடத்தை 02 மாணவர்களும் பெற்றுக்கொண்டனர். இவ்வாறு மாவட்ட மட்டத்தில் 388 மாணவர்களும், தேசிய மட்டத்தில் 42 மாணவர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும். திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக கௌரவ M.K.A.D.S. குணவர்தன, பிரதி அமைச்சர் (புத்தசாசனம் மற்றும் மதவிவகார அமைச்சு) அவர்களும் சிறப்பு விருந்தினர் அமைச்சு செயலாளர் திரு. M.K.D. திஸாநாயக்க அவர்களும், கௌரவ விருந்தினராக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சன்னி தானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள் அவர்களும் மற்றும் சுவாமி இராஜேஸ் வரானந்தா மகராஜ் (கொழும்பு இராமகிருஸ்ண மிஷன்) ஆத்ம தேவப் ப்ராண மாதாஜீ (தலைவர், சாரதா மிஷன்) அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## தர்மாசிரியர் கருத்தரங்கு

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் இந்து தர்மாசிரியர் பரீட்சையை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மாவட்டங்கள் தோறும் பல கருத்தரங்கு களை நடாத்தி வருகின்றது.

இக் கருத்தரங்கு கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பெப்ரவரி மாதம் 1ம், 2ம் திகதிகளில் நடைபெற்றது. இதில் கொழும்பு, கம்பகா, காலி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களை ஒருங் கிணைத்தே நடைபெற்றது. அதில் 105க்கு மேற்பட்டோர் கலந்து பயன் பெற்றனர். இக் கருத்தரங்கிலே பன்னிரு திருமுறைகள், கோயில்களும் கலைகளும் வேதங்களும் ஆகமமும், இலங்கையில் இந்து சமயமும் ஆறுமுகநாவலரும் போன்ற தலைப்புகளில் விரிவுரைகள் இடம்பெற்றன. அத்துடன் பன்னிரு திருமுறைகள், வேதங்களும் ஆகமங்களும், சைவ சமய வரலாறு, ஔவையார் அறிவுச் செல்வம் ஆத்ம விமோசனம் தர்மாசிரியர் வினாவிடை, சமய ஞானிகளும் பெரியார்களும் போன்ற நூல் களும் மாணவர் பதிவேடும் வழங்கப்பட்டன.

மற்றும் 08/03/2014, 09/03/2014 இரு நாட்கள் இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கண்டி, நுவரெலியா, இரத்தின புரி, மாத்தளை, பதுளை மாவட்டங்களை சேர்ந்த தர்மாசிரியர் பரீட்சைக்கு தோற்ற வுள்ளவர்களுக்கு கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் 120 பேர் கலந்து கொண்டனர். பரீட்சைக்குத் தேவையான விரிவுரைகள், குழுச் செயற்பாடு போன்றன இதன் போது நடைபெற்றன.

## இசைக்கருவி கொள்வனவும், விநியோகமும்

அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடு களை ஊக்குவிக்கும் பொருட்டு இவ்வருடம் காலாண்டுப் பகுதியில் 110 தாளங்களும், 100 சுருதிப்பெட்டிகளும் கொள்வனவு

செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

2013ஆம் இறுதிக்காலாண்டுக்குரிய திட்டத்தின்கீழ், காலிமாவட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு 05 சுருதிப் பெட்டிகளும், 06 தாளங்களும் வழங்கப்பட்டுள்ளன. இத்தோடு கொழும்பு மாவட்டத்திற்கு 02 சுருதிப் பெட்டிகளும், 02 தாளங்களும் வழங் கப்பட்டுள்ளன. இவை தவிர திருகோண மலை மாவட்ட அறநெறிப் பாடசாலைக்கு 01 தாளமும், 01 சுருதிப் பெட்டியும் வழங் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### சீருடை விநியோகம்

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை இலவசமாக எமது திணைக்களத் தினால் வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் காலி மாவட்ட பாடசாலைகளில் 275 மாணவர்களுக்கு ஆண், பெண் சீருடை வழங்கப்பட்டுள்ளன. கொழும்பு மாவட் டத்தில் இரண்டு அறநெறிப் பாடசாலை களுக்கு 60 ஆண்பிள்ளைகளுக்கான சீருடையும், 80 பெண்பிள்ளைகளுக்குமான சீருடையும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை விட மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திரு கோணமலை மாவட்டங்களில் 600 ஆண் பிள்ளைகளுக்கான சீருடையும், 600 பெண் பிள்ளைகளுக்கான சீருடையும், மன்னார் மாவட்டத்தில் 2200 ஆண் பிள்ளைகளுக் கான சீருடைகளும் 1800 பெண் பிள்ளை களுக்கான சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

### பாடப் புத்தகங்களின் விநியோகம்

பதினைந்து பாடசாலைகளுக்கு 116 மாண வர் வரவு இடாப்புக்களும், இரத்தினபுரி மாவட்டத்திற்கு 250 மாணவர் வரவு இடாப் புக்களும் வழங்கப்பட்டுள்ளன. எட்டு அறநெறி பாடசாலைகளுக்கு சைவபோதினி (பாலர் பிரிவு) நூல்கள் 45 உம் மத்திய பிரிவிற்கு 30 நூல்களும் வரவு இடாப்பு 45 உம் ஆசிரியர் கையேடு 16 உம் அறநெறி அமுதம் 30 நூல்களும் ஆத்ம விமோசனம் 30 நூல்களும் எமது திணைக்களத்தினால் வழங்கப்பட்டன. மேலும், மட்டக்களப்பு மாவட்ட அறநெறி பாடசாலைகளுக்கு சைவ போதினி (பாலர் பிரிவு) 1000 நூல்களும் மத்திய பிரிவு நூல்கள் 1000 உம் வரவு இடாப்பு 1000 உம் ஆசிரியர் கையேடு 1000 உம் வழங்கப்பட்டன.

### விசேட வகுப்புக்கள்

திணைக்களமானது அறநெறிப்பாடசாலை மாணவர்களையும், இந்து மக்களையும் ஊக்குவிக்கும் வகையில் விசேட வகுப்புக் களை நடத்திவருகின்றது. இதன்படி இவ் வருடக் காலாண்டுப் பகுதிக்குள் யாழ்ப் பாணம், நல்லூர் ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் 20 மிருதங்க வகுப்புக்களும், 13 வயலின் வகுப்புக்களும், 18 யோகா சனப் பயிற்சி வகுப்புக்களும், 06 வீணை வகுப்புக்களும் நடைபெற்றுள்ளன. இதே வேளை மட்டக்களப்பு, நாவற்குடா கலாசார நிலையத்தில் 60 நடன வகுப்புக்களும், 08 யோகாசன வகுப்புக்களும் இதுவரையில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### நூல் அச்சிடுதலும் விநியோகித்தலும்

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக் கான பாடநூல்கள் அரச அச்சகக் கூட்டுத் தாபனத்தின் ஊடாக அச்சிடப்பட்டு, விநியோ கிக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் இந்து இறுதிநிலைப் பரீட்சை வினாவிடை நூல்கள் 1000 பிரதிகள் அச்சிடப்படவுள்ளன.

இத்தோடு அறநெறிப்பாடசாலை மாண வர்களுக்கான சைவபோதினி நூல்களும் அச்சிடப்பட்டுள்ளன. பாலர் பிரிவிற்கு 600 பிரதிகளும், கீழ்ப்பிரிவுக்கு 600 பிரதிகளும், மத்திய பிரிவிற்கு 500 பிரதிகளும், மேற் பிரிவுக்கு 3000 பிரதிகளும் இதுவரையில் அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தளபாடக் கொள்வனவு நிதியுதவி

சிறந்த முறையில் இயங்கி வருகின்ற அறநெறிப் பாடசாலைகள் தெரிவு செய்யப் பட்டு அவற்றிற்கு தளபாடம் கொள்வனவு செய்வதற்கான நிதியாக 30,000 ரூபா வீதம் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வரு கின்றது. அரச நிதி ஒதுக்கீட்டுக்கமைவாக ஒவ்வொரு வருடமும் மாவட்டம் தோறும் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இந் நிதி வழங்கப்படுகின்றது.

## பண்ணிசை வகுப்பு

மாணவர்கள் பண்ணோடு பாடுதலை பயிற்சி யளிக்கும் முகமாக பண்ணிசையில் தேர்ச்சி மிகுந்த ஆசிரியர்கள் மூலம் பண்ணிசை வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இதற்கான பாடத்திட்டத்தையும் எமது திணைக் களம் வழங்கி வருகின்றது. அதற்கான ஊக்கு விப்பாக களுத்துறை மாவட்டத்தில் 15 பண்ணிசை வகுப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

## கட்டட நிதியுதவி

தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னிட்டு திணைக்களத்தினால் கட்டட நிதி வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இக் காலாண்டு பகுதியில் புத்தளம் மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளுக்கும் கேகாலை மாவட்டத்தில் ஒரு பாடசாலைக் கும் குருநாகல் மாவட்டத்தில் ஒரு பாட சாலைக்கும் கட்டட நிதி வழங்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்து அறநெறி ஆசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு

இந்து அறநெறிப் பாடசாலைகள் திணைக் களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு. எமது பாடத்திட்டத்திற்கு அமைவாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் வாசிரியர்கள் ஒரு நெறிமுறைக்கு ஏற்ப கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் பொருட்டு வதிவிடக் கருத்தரங்குகள் திணைக்களத்தால் மாவட்டங்கள் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு 14.02.2014 - 16.02.2014 வரை மூன்று நாட்கள் நாவற்குடா இந்து கலாசார நிலை யத்தில் திணைக்களத்தின் உதவிப் பணிப் பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இக் கருத்தரங்கிற்கு திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலனறுவை மாவட்டங்களை சேர்ந்த 200 ஆசிரியர்கள் கலந்து பயன் பெற்றனர். இதில் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான குழுச் செயற்பாடு, பாடல், நடிப்பு, நடனம் என்ப வற்றின் மூலம் வகுப்பறை கற்பித்தல் முறைமை, தியானப் பயிற்சி, பண்ணிசை போன்ற பல விடயங்கள் இடம்பெற்றன. அத்துடன் அறநெறிப் பாடசாலை மாணவர் களுக்கான கற்பித்தல் முறைகள், ஒழுக்க விழுமியங்களை பெறுதல், சமய தத்துவங் களை அறிந்து கொள்ளல் போன்ற விரிவுரை களும் இடம்பெற்றன.

# இந்து விவகாரப் பிரிவின் செயற்திட்டங்கள்

இந்து விவகாரப் பிரிவானது இந்து சமய நம்பிக்கைகளையும், பாரம்பரியங்களையும் பேணும் பொருட்டு மாவட்டங்கள் தோறும் பல்வேறு விதமான செயற் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றது.

இதன் கீழ் தைப்பொங்கல் விழா, சுதந்திரதின விழா, மகா சிவராத்திரி, நவராத்திரிதின விழா, புண்ணிய கிராமம் இந்து இளைஞர், யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சிப் பட்டறை குருபூசை, சமய சொற் பொழிவு, தேசத்திற்கு மகுடம் போன்ற செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

## புண்ணிய கிராமம் செயற்திட்டம்

இத்திட்டம் இளஞ் சமுதாயத்தினரிடையே நற்பண்புகளை வளர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட செயற்திட்டமாக அமைகிறது.

இந்துசமய நம்பிக்கைகளையும், பாரம்பரியங்களையும் பேணும் முகமாக பல்வேறு செயற்பாடுகளை மாவட்டங்கள் தோறும் செயற்படுத்தி வருகின்றது. இன்றைய சமுதாயத்தில் நற்பண்புகள் நிறைந்த நற் பிரஜைகளை உருவாக்கவும், இறை நம்பிக்கையுடன் கூடிய சிறந்த வாழ்க்கையை சமுதாயத்தில் நிலவச் செய்யும் பொருட்டும் புண்ணிய கிராமம் எனும் நிகழ்ச்சித் திட்டம் திணைக்களத்தினால் நடாத்தப்படுகிறது. இவ்வகையில் கடந்த வருட இறுதிக் காலாண்டுப் பகுதியிலும் இவ்வருட ஆரம்ப காலண்டுப் பகுதியிலும் யாழ்ப்பாணம், புத்தளம், இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளன.

## புத்தளம் மாவட்ட புண்ணிய கிராமம் நிகழ்ச்சித் திட்டம்

இந் நிகழ்வானது 24.11.2013 ஆம் திகதி திருமதி பவானி முகுந்தன் தலைமையில் புத்தளம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், திணைக்களத்தின் கணக்காளர் திரு. M.G. காண்டீபன், புத்தளம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. S. நாகராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

'ஆலயங்கள் சமூக நிறுவன்ங்களாக அதன் பணிகள்' எனும் தலைப்பில் கலா பூஷணம் வசந்தா வைத்தியநாதன் அவர் களின் சொற்பொழிவும், 'ஒற்றுமையான குடும்பமும் கலாசார தலைமையுடன் கூடிய நாளைய தினமும்' என்ற நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கலந்துரையாடலும் நடைபெற்றது. இவ் வைபவத்தில் புத்தளம் மாவட்டத்தைச் சார்ந்த ஆலயங்களின் பிரதிநிதிகள், இந்து மன்றங்களின் பிரதிநிதிகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## காலி மாவட்டம்

இம் மாவட்டத்தின் நாக்கிய தெனாய பிரதேசத்திலுள்ள கா/தலங்கா சரஸ்வதி தமிழ்

வித்தியாலயத்தில் 19.01.2014 மு.ப. 9.30 - பி.ப 3.30 வரை புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்டம் இடம் பெற்றது. உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அறநெறி பாடசாலை மாணவர் களுக்கு சீருடையும், சுருதிப் பெட்டியும் வழங்கப்பட்டன. இந் நிகழ்ச்சிக்கு காலி மாவட்டத்திலுள்ள ஆலய நிர்வாகிகளும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் வருகை தந்தனர். இதில் இந்து கலாச்சார விழுமியக் கருத்துக்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டன.

### கிளிநொச்சி

11.01.2014 அன்று நடைபெற்ற புண்ணிய கிராம நிகழ்வு சோறன்பற்று வெள்ளப்பனம் அம்மன் கோயில் மண்டபத்தில் ஆலய நிறுவன, அறநெறிப் பாடசாலைகளின் ஆதர வோடு இடம் பெற்றது. இங்கு பெரியார்களை கனம் பண்ணுவது பற்றியும், இந்து சமயத்தி லிருந்து வேற்று மதம் மாறுவது பற்றியும் மக்களுக்கு ஆழமான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் உதவிப் பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் கணக்காளர் M.G. காண்டீபன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

### மாவிட்டபுரம்

15.01.2014 அன்று கன்னவளவு பிள்ளை யார் கோயில் மண்டபத்தில் மேற்படி புண்ணிய கிராம நிகழ்வு இடம்பெற்றது. ''சமயமும் வாழ்வும்'', ''திருமுறையில்'' வாழ்வு போன்ற சொற்பொழிவுகள் இதன் போது இடம்பெற்றதோடு 10க்கும் மேற்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

### மட்டக்களப்பு

15.02.2014 அன்று கதிரவெளி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் மேற்படி நிகழ்வு இடம் பெற்றது. இந்து மதம் மற்றும் மதமாற்றம் தொடர்பான விழிப்புணர்வும், அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடுகள் இந்துமத நிறுவனங்களின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றன.

### பதிவு செய்தல்

இவ்வருடத்திற்கான புதிய அறநெறிப் பாட சாலைகள் நாடளாவிய ரீதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ் வருடம் ஜனவரி மாத பகுதியில் 22 அறநெறிப் பாடசாலைகளும் பெப்ரவரி மாதத்தில் 43 அறநெறிப் பாடசாலைகளும் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சமயச் சொற்பொழிவுகள்

சமய விழிப்புணர்வை ஊட்டும் நோக்குடன் 45 இடங்களில் சொற்பொழிவுகள் இக் காலப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. சமயம் சார்ந்த அறிவினையும், அதனூடாக விழிப் புணர்வையும் ஏற்படுத்துவதை நோக்க மாகக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் இந்து விவகாரப் பிரிவினரால் நடாத்தப் படுகின்றன. இச் சொற்பொழிவுகள் இந்து சமயத்தில் துறைசார் நிபுணத்துவம் பெற்ற பேராளர்களால் நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | 38 |
| புத்தளம் | - | 1 |
| கொழும்பு | - | 1 |
| மட்டக்களப்பு | - | 1 |
| கிளிநொச்சி | - | 4 |

இவ்வாறாக கடந்த வருட இறுதிக் காலாண்டில் மேற்படி சொற்பொழிவுகள் இடம்பெற்றுள்ளன.

மேலும் இவ்வருட காலாண்டுப் பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் 2 சொற்பொழிவு கள் இடம்பெற்றன. இந்தியாவின் சதுரகிரி மலையிலிருந்து வருகை தந்துள்ள திருவடி சித்தர் சக்திவேல் ஐயா அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு கொழும்பு மாவட்டத்தின் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் இயற்கையான முறையில் காய்கள், பழங்கள், நீர் போன்றவற்றின் மூலம் பல நோய்களுக்கு தீர்வு காணும் ஆலோச னைகள் வழங்கப்பட்டன.

இதைவிட மட்டக்களப்பு, பதுளை போன்ற மாவட்டங்களிலும் சிறப்பு சொற் பொழிவுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சிவராத்திரி விரத கால சிறப்புச் சொற்பொழிவு

27/02/2014 அன்று இரவு 7.30 மணியளவில் இரத்தினபுரி இரத்தினேஸ்வரம் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி நிகழ்வில் 'சிவனுக்கு உகந்தது சிவராத்திரி' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெற்றது. இதில் சிவராத்திரி மகிமை, சிவன் பிரம்மா விஷ்ணுவிற்கு அருளியமை, சிவராத்திரி தொடர்பான புராணக் கதைகள் என்பன பற்றி எடுத்துரைக்கப்பட்டன.

## குருபூசை தினச் சொற்பொழிவு

சைவசமய நம்பிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு நாயன்மார்களின் நினைவாக குருபூசை தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அபிராமி பட்டர் குருபூசை விழா யாழ் மாவட்டம் ஊர்காவற்றுறை பிரதேசத் திற்குட்பட்ட நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் 30.01.2014 ஆம் திகதி நடைபெற்றது. இதன் போது 'அன்னை யின் திருவருள்' என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

## பாராளுமன்றத்தில் நவராத்திரி விழா

புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த 11.10.2013 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாராளுமன்ற முன்றலில் மங்கள இசையுடன் நவராத்திரி விழா ஆரம்பமானது. கௌரவ சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் புத்தசாசனம் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் M.K.B திசாநாயக்க, இந்து சமய கலாசார திணைக் களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், கணக்காளர் M.G. காண்டீபன், உதவிப் பணிப்பாளர்கள் திருமதி ஹேமலோஜினி குமரன் திரு ம. சண்முக நாதன், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

மூன்று தேவியர்களுக்கும் விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து சுவாமி விபுலாநந்த அழகியற் கல்லூரி மாணவர்கள், விரிவுரையாளர்களின் 'வானவில் வர்ணங்கள்' எனும் நாட்டிய நாடகமும், கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம், மாத்தளை நர்த்தனாஞ்சலி நாட்டிய கலாலயா போன்ற மாணவர்களின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### மாவட்டங்கள் தோறும் நவராத்திரி விழா

திணைக்களத்தின் அனுசரணையுடன் மாவட்டங்கள் தோறும் நவராத்திரி விழாக்கள் கொண்டாடப்பட்டன.

### களுத்துறை

இம் மாவட்டத்தில் நவராத்திரி விழா 06.10.2013 ஆம் திகதி இந்து சமய கலா சார திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமையில் மத்துகம நகர மண்டபத்தில் சிறப்புப் பூஜை வழிபாடுகளுடன் இவ் வைபவம் ஆரம் பிக்கப்பட்டது. இப் பூஜையினை களுத்துறை கதிர்வேலாயுத சுவாமி கோவில் பிரதம சிவாச்சாரியார் அவர்கள் நிகழ்த்தினார். களுத்துறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி பவானி முகுந்தனின் வரவேற்புரை, கலாபூஷணம் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் களுத்துறை மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் நவராத்திரி விழா தொடர்பாக அறநெறிப்பாடசாலை களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டி களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றன. இவ் விழாவில் களுத்துறை மாவட்டத்தைச் சார்ந்த ஆலயங்களின் பிரதிநிதிகள், அற நெறிப் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், இந்து மன்றங்களின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மட்டக்களப்பு

நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் 13.10.2013 ஆம் திகதி கலாசார உத்தி யோகத்தர் திருமதி எழில்வாணி பத்மகுமார் தலைமையில் நவராத்திரி விழா நடை பெற்றது. பிரதமவிருந்தினராக சிவயோகச் செல்வர் சாம்பசிவ சிவாச்சாரியார் அவர் களும், சிறப்பு விருந்தினராக சைவப்புலவர் சிவஞானசோதி ஞானசூரி அவர்களும் கலந்து கொண்டனர். விஷேட பூசை வழி பாடுகளும், சிறப்பு விருந்தினர் அவர்களின் 'நவராத்திரி விழா சிறப்பு' பற்றிய சிறப்புச் சொற்பொழிவும், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. மட்டக்களப்பு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்நிகழ்விற் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கதாகும்.

அத்துடன் இரத்தினபுரி, யாழ்ப்பாணம், பதுளை, கண்டி, கொழும்பு ஆகிய இடங் களிலும் நவராத்திரி விழா சிறப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### குருபூசை

சைவ சமய நாயன்மார்கள், இந்து சமய ஞானிகள் குருபூசை தினங்கள் திணைக்களத் தினூடாக மாவட்ட ரீதியில் கொண்டாடப் பட்டு வருகின்றன.

அதற்கமைவாக இவ்வருடம் 24 குரு பூசைகள் குறிப்பிட்ட மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளன. அவை வருமாறு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - 12 |
| கொழும்பு | - 02 |
| புத்தளம் | - 02 |
| களுத்துறை | - 01 |
| முல்லைத்தீவு | - 01 |
| திருகோணமலை | - 01 |
| கண்டி | - 01 |
| மட்டக்களப்பு | - 02 |
| அம்பாறை | - 02 |

### தைப்பொங்கல் விழா

இவ்வருடம் அதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் 16.01.2014 வியாழக்கிழமை கண்டி போகம்பரை மைதானத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஏர்ல் குணசேகர சுதந்திர கல்வி மையமும் இணைந்து தைப்பொங்கல் விழாவினை வெகு சிறப்பாக நடாத்தியது. இவ் வைப வத்திற்கு திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு. ம. சண்முகநாதன் அவர்களும் கலந்து சிறப் பித்தனர். இதன் போது பல கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

### முத்திரை வெளியீடு

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் தபால் திணைக்களமும் இணைந்து தைப்பொங்கல் சிறப்பு முத்திரை வெளி யீட்டை வெளியிட்டு வைத்தன. 12.01.2014 ஞாயிற்றுக்கிழமை 9.00 மணிக்கு யாழ்/ நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் 2 முத்திரைகள் வெளியிடப்பட்டன. இந் நிகழ்விற்கு கௌரவ பிரதமரும் புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் திரு. மு. ஜயரட்ன அவர்கள் பிரதம விருந் தினராகவும் தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் கௌரவ ஜீவன் குமாரதுங்க, பிரதி அமைச்சர் கௌரவ சனத்குணதிலக, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் சிறப்பு விருந்தினகளாகவும் கலந்து சிறப்பித்தனர். எமது திணைக்களத்தின் சார்பில் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி, கணக் காளர் திரு. M. G. காண்டீபன் அவர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 150 பேர் வரை கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதைவிட மாவட்ட மட்டத்திலான தைப்பொங்கல் விழாக்களும் எமது திணைக் களத்தினால் நடைபெற்றன. அவை வருமாறு:

14/01/2014 - நாவலர் மணி மண்டபம்
16/01/2014 - முல்லைத்தீவு மாவட்ட செயலகம் போன்றவற்றிலும் யாழ்ப்பாணம், வேலணை மத்திய கல்லூரியிலும்/ மேலும் வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, திருகோணமலை, களுத்துறை, கொழும்பு, நுவரெலியா, புத்தளம் ஆகிய மாவட்டங் களிலும் 14 பொங்கல் விழாக்கள் நடை பெற்றுள்ளன.

### சிவராத்திரி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையோடு, இரத்தினபுரி இரத்தினேஸ்வரம் சைவ பரிபாலன மகா சபை இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய மகா சிவராத்திரி விழாவானது கடந்த பெப்ரவரி மாதம் 27ம் திகதி மாலை 5.30 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 6.00 மணி வரை இரத்தினபுரி மாவட்ட இரத்தி னேஸ்வரர் சிவன் ஆலயத்தில் நடைபெற்றது.

இவ் விழாவிற்கு புத்தசாசன மத அலுவல்கள் பிரதி அமைச்சர் M.K.A.D.S. குணவர்த்தன, தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் J.A.A.N. கன்னங்கரா, திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு. ம. சண்முகநாதன் மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கரா, சப்பிரகமுவ மாகாண சபை உறுப்பினர் பிரபாத அல்விஸ், இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தலத்தா அத்துக் கோரல, மாகாண சபை உறுப்பினர் மற்றும்

திணைக்கள உத்தியோகத்தர்கள் இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு 2000க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்தோடு, அறநெறி பாடசாலை மாணவர் களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இவை தவிர மாவட்ட மட்டத்திலான சிவராத்திரி விழாக்களும் இடம்பெற்றன. காலி, முல்லைத்தீவு, பதுளை, யாழ்ப்பாணம், புத்தளம், கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மேற்படி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

## சுதந்திரதின விழா

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 66 வது சுதந்திரதின விழாவை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் பெப்ரவரி மாதம் 04.02.2014 அன்று கேகாலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் காலை 6.30 மணி முதல் இந்து சமய அனுஷ்டானங்களுடன் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்றன.

சப்பிரகமுவ மாகாண சபை உறுப்பினர் களான அண்ணாமலை பாஸ்கரன் மற்றும் கணபதி இராமச்சந்திரன், தாரக பாலசூரிய உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மற்றும் கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. துசித்த வணிகசிங்க, புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ரமணி குணவர்த்தனா திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு. ம. சண்முகநாதன், திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆலய பரிபாலன சபையின் தலைவர் திரு. ஏ. சிவலிங்கம் பிள்ளை, ஆலய நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் பூஜைகளிற் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தேசத்திற்கு மகுடம் கண்காட்சி

அனைத்து அமைச்சுக்கள், அரச திணைக் களங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பன இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியானது குருநாகல் மாவட்டத் திலுள்ள குளியாப்பிட்டி வயம்ப பல்கலைக் கழக வளாகத்தில் 21.02.2014-01.03.2014 வரை இடம் பெற்றது.

இக் கண்காட்சியில் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம், கிறிஸ்தவ, முஸ்லிம் ஆகிய திணைக் களங்கள் தங்களுடைய செயற்பாடுகளை இக் கண்காட்சியின் போது முன்வைத்தனர். அந்த வகையில் எமது இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களமானது ஆலய/ நிறுவன அறநெறிப் பாடசாலை, ஆராய்ச்சிப் பிரிவு, இந்து விவகாரம் பிரிவு களில் இருந்து தங்களுடைய ஆக்கங்களை கண்காட்சியில் மக்கள் பார்வைக்காகவும், தகவலுக்காகவும் வைத்திருந்தன.

மேலும் எமது பாரம்பரிய உணவு, உடை, இந்து சமய சிலை வடிவம், போன்றவைகள் காட்சிப்படுத்தப்பட்டன. இத்தோடு மாணவர்கள் பயன்படும் வகை யில் சுவாமி இராமகிருஸ்ணர், விபுலானந்தர், சாரதாதேவி போன்றவர்களின் சிந்தனைத் துளிகளும் நாயன்மார், இலங்கை சமயப் பெரியார்கள் போன்றோரின் திருவுருவப் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

## கதிர்காம யாத்திரிக நவீன சுற்றுலா விடுதிக் கட்டடத் திறப்பு விழா

திணைக்களத்தின் கீழ் இயங்கும் கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதியின் நவீன சுற்றுலா விடுதியின் கட்டடத்தின் திறப்பு விழா

8.10.2013 ஆம் திகதி வெகு விமர்சையாக நடைபெற்றது. மத அனுஷ்டானங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வைபவத்தில் மாண்பு மிகு பிரதம மந்திரி டி.எம். ஜயரத்தின அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வைபவ ரீதியாக கட்டடத்தினை திறந்து வைத்தார். இவ்வைபவத்தில் பௌத்த சாசன மற்றும் மதஅலுவல்கள் அமைச்சின் பிரதிஅமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன, மேலதிக செயலாளர் திருமதி ரமணி குணவர்த்தன, பொதுசன மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் திரு கசியன் ஹேரத், மொனராகலை மாவட்ட செயலாளர் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்து இளைஞர் யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சிப் பயிற்சிப் பட்டறை

ஆன்மீக எழுச்சிப்பட்டறை முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை எனும் பிரதேசத்தில் பாரதி சிறுவர் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ் எழுச்சிப் பட்டறையானது 2013 ஐப்பசி மாதம் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் நடைபெற்றது. இதிலே சுமார் 125 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர். அதிகாலை 5.30 மணியளவில் யோகாசனம், தியானம், பஜனை போன்றவற்றுடன் ஆரம்பமாகிய இப் பயிற்சிப் பட்டறையில் ஆன்மீக எழுச்சி உரைகள், உளவளம் தொடர்பான விரிவுரைகள், விளையாட்டு போன்ற பல விடயங்கள் இடம்பெற்றன. இந்த ஆன்மீக எழுச்சிப்பட்டறையானது திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்றது. இதிலே உதவிப்பணிப்பாளர் திரு. ம. சண்முகநாதன், கொழும்பு சாரதா மிஷன் தலைவர் பிரணவ மாதாஜி ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

ஒரு காரியத்தைச் செய்யும் போது நமக்குத் துணையாக மற்றவர்கள் இருப்பது நல்லது. 'இவன் சிறியவன் தானே!' என்று யாரையும் அவமதிக்காதே.

இராமர் குரங்குகளைத் துணைக் கொண்டு கடலில் அணைகட்டி இராவண வதம் புரிந்தார்.

அரிசி உயர்ந்தது; உமி தாழ்ந்தது. இப்படி இருந்தாலும் அரிசியை விட்டு உமி பிரிந்துவிட்டால் முளைப்பதில்லை. உமியின் துணைக்கொண்டுதான் அரிசி முளைக்கின்றது.

உமி போன்ற சிறியவர் துணையால் பெரிய காரியத்தைச் செய்யலாம்.

**திருமுருக கிருபானந்த வாரியார்**

**அருள்வாக்கு**

நான் பணக்காரன். எனக்கு வேண்டிய மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். நான் வாலிபன். என்னையார் என்ன செய்ய முடியும்? என்றெல்லாம் மார் தட்டிக் கொள்ளாதே. இவையெல்லாவற்றையும் ஒரு நொடியில் காலன் கொள்ளை கொண்டு விடுவான் என்பது மட்டும் நினைவிலிருக்கட்டும்.

**பஜகோவிந்தம்**

# ஆய்வுப் பிரிவின் செயற்திட்டங்கள்

## இந்து கட்டடக்கலை சிற்பக்கலை பயிலரங்கு

இச்செயற்திட்டம் இந்துகலைகள் தொடர்பாக குறிப்பாக இந்து நுண்கலைகள் தொடர்பான அறிவினை பல்கலைக்கழக மாணவர்கள், இந்தசமய ஆசிரியர்கள், க.பொ.த. உயர்தர வகுப்பில் இந்துசமயம், இந்து நாகரிகம் கற்கும் மாணவர்கள் ஆகியோருக்கு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இச்செயற்திட்ட பாட விடயப்பரப்பு, இந்துக் கோயில்களின் அமைப்புமுறை, கோயில் வகைகள் அவற்றின் பல்வேறு வகை பாணிகள், அவைகாணப்படும் பிரதேசங்கள், அவற்றில் குறிப்பாக திராவிடகலைப்பாணி அவற்றின் காலகட்ட வளர்ச்சி, கோயில்களில் காணப்படும் சிற்பங்கள், விக்கிரகங்கள், ஓவியக்கலை, நடனக்கலை இசைக்கலை ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

வளவாளர் குழு - பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன், தென்னிந்திய தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி எஸ். இராஜகோபால்

இச்செயற்திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் இரு கல்வி வலயப்பிரிவுகளிலும் கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தா அழகியற் கற்கை மாணவர்களையும் உள்ளடக்கியதாக கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெற்றது.

திருகோணமலை மூதூர் கல்வி வலயத்தில் 23, 24 ஆம் திகதிகளில் இச்செயலமர்வு கிளிவெட்டி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இச்செயலமர்வில் 175 மாணவர்கள், 6 ஆசிரியர்களும் கலந்து கொண்டு இந்து கட்டடக்கலை சிற்பக்கலை தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக் கொண்டனர்.

திருகோணமலை கல்வி வலயத்தில் இச்செயலமர்வு கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 25, 26 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இச்செயலமர்வில் 225 மாணவர்களும், 13 ஆசிரியர்களும் கலந்து பயன் பெற்றனர். 27 ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பிரிவினைச் சார்ந்த விபுலானந்தா அழகியற் கற்கை மாணவர்கள் 200 பேர் இதில் கலந்து பயன்பெற்றனர்.

## சாசனவியல் பயிலரங்கு

இந்துமக்களின் தொன்மையான கல்வெட்டுக்களை இனங்காணுதலும் அவை குறிப்பிடும் வரலாற்றுச் செய்திகளை வாசிப்பதற்கும் மாணவர்களைப் பழக்குவதற்குமாக இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சிநெறி பல்கலைக்கழக மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பயிலரங்கின் பாடத்திட்டம் பிராமி சாசனங்கள், அசோக பிராமி சாசனங்கள், இலங்கை பிராமி சாசனங்கள், வட்டெழுத்து சாசனங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இப்பயிலரங்கு செப்டெம்பர் 28 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 07 ஆம் திகதி வரை மட்டக்களப்பு நாவற்குடா, இந்து கலாசார மண்டபத்தில் உயர்நிலைப் பயிற்சிப் பயிலரங்காக நடைபெற்றது. ஆரம்பநிலைப் பயிலரங்கில் கலந்து பயிற்சி பெற்ற 28 பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இப்பயிலரங்கின் விரிவுரைகளை பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் பியதிஸ்ஸ சேனநாயக்கா, பேராசிரியர் எஸ்.இராஜகோபால் ஆகியோர் நிகழ்த்தினர்

## நாட்டாரியல் மாநாடு

கிராமியக் கலைகளைப் பேணுதல், கலைஞர்களை ஊக்குவித்தல் அக்கலைகள் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் முதலான நோக்கங்களை அடிப்படையாக கொண்டு நாட்டாரியல் மாநாடு என்னும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இம்மாநாடு திருகோணமலை மாவட்டத்தில் ஒக்டோபர் மாதம் 25, 26, 27 ஆகிய மூன்று தினங்களில் நடைபெற்றது. இந் நிகழ்வில் இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள பாரம்பரிய கலைஞர்கள் 225 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொண்டனர்

மாநாட்டில், காலையில் நாட்டார் கலைகள் தொடர்பான கலைஞர்களின் கருத்துரைகள், மாலை, கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கடற்கரை மைதானம், ஓசில் மைதானம் சிவானந்த தபோவனம் ஆகிய மூன்று இடங்களில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன் பாரம்பரிய கலைகள் தொடர்பான களரி தோரணம் போன்ற காட்சிப்படுத்தலும் இடம்பெற்றன.

## நூலகங்களுக்கு நூற்பொதிகள் வழங்கல்

தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி திணைக்களத்தின் ஆய்வுப் பிரிவால் வெளியிடப்படும் நூல்கள் பொதி செய்யப்பட்டு வருடாந்தம் அரசபாடசாலை, பொது, ஆலய நூலகங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வகையில் இவ் வருடம் 2010, 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் வெளியீடு செய்யப்பட்ட நூல்கள் 15 பொதி செய்யப்பட்டு, 31.10.2013 ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தில் அரச பாடசாலை நூலகங்கள் 200 இற்கு வழங்கப்பட்டன.

## இலங்கைத்தீவுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு



கிடைத்தற்கரிய நூல் செயற்திட்டங்களுள் ஒன்றாக An Historical Relation of the Island Ceylon என்னும் நொபேட் நொக்சினுடைய நூல் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வெளியீடு செய்யப்பட்டது. இந்நூல் 500 பிரதிகள் அச்சிடப்பட்டன. இந்நூலின் பதிப் பாசிரியர் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் ஆவார். ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு இந்நூலை மொழிபெயர்த்தவர் திரு. திருவேணிசங்கமம் ஆவார். இந்நூல் 17ஆம் நூற்றாண்டில் கண்டிச் சிங்களவர்களிடையே காணப்பட்ட சமூகப்பண்பாட்டு நிலைகளை வெளிப்படுத்துவதாக உள்ளது.

## கோபுரம் தகவல் இதழ்



திணைக்கள தகவல் இதழ் 01 அச்சிடப்பட்டுள்ளது. திணைக்களச்செய்திகள், இந்து சமயம்சார் கட்டுரைகளை கொண்ட இத்தகவல் இதழ் 3000பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

## உள்ளூர் எழுத்தாளர் நூல்கள் கொள்வனவுத் திட்டம்

இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக அவர்களால் வெளியிடப்பட்ட நூல்களை திணைக்களம் கொள்வனவு செய்து ஊக்குவிக்கின்றது. அவ்வகையில் இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 59 எழுத்தாளர்களிடமிருந்து 2146 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

# இந்து ஆலயப் பிரிவின் செயற்திட்டங்கள்

### புதிய ஆலயங்களின் பதிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அகில இலங்கை ரீதியாக 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரை 5765 ஆலயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2014 பெப்ரவரி மாத முடிவில் மேலும் புதிதாக 55 ஆலயங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. அவ்வாறே திணைக்களத்தில் புதிதாக 9 இந்து சமய நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### இந்துக் குருமார்க்கான அடையாள அட்டை

திணைக்களத்தின் மூலம் ஆலயங்களில் பணி புரியும் இந்துக் குருமார்க்கென குருமார் அடையாள அட்டை விநியோகிக்கப் படுகின்றது. இத் திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு 16 இந்து குருமார் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

### தேசத்திற்கு மகுடம் திட்டத்தின் கீழ் ஆலயங்களுக்கான நிதியுதவி

2014 ஆம் ஆண்டு குருணாகல் குளியாப் பிட்டியில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு புத்தளம், குருணாகலை மற்றும் கேகாலை மாவட்டங் களின் ஆலயங்களிற்கு திணைக்களத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் கேகாலையில் 30 ஆலயங்களுக்கும் குருணாகலை மாவட் டத்தின் 29 ஆலயங்களுக்கும் புத்தளம் மாவட்டத்தின் 25 ஆலயங்களுக்கும் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நிதியுதவி குறித்த மாவட்டத்தின் செயலகங்கள் ஊடாக அனுமதிக்கப் பட்டுள்ளது.

இதே வேளை தேசத்தின் மகுடம் அபிவிருத்தி திட்டத்தின் புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு புத்தளம் மாவட் டத்தின் 10 ஆலயங்களுக்கும், கேகாலை மாவட்டத்தின் 4 ஆலயங்களுக்கும் நிதியுதவி வழங்கியுள்ளது. இந்நிதியுதவி குறித்த மாவட்டத்தின் செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**தியானம்**

தியானத்தின்போது மூளை அணுக்களின் பலம் கூடுகிறது. தினமும் பதினைந்து நிமிடங்களாவது தியானம் செய்ய வேண்டியது அசியமாகும். காலையிலோ மாலையிலோ எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். தியானத்தின்போது அவசரம் இருக்கவே கூடாது. ஏதாவது ஒரு வேலையைச் செய்ய மனதில் நினைத்துக் கொண்டு தியானம் செய்ய ஆரம்பிக்கக் கூடாது. உணவு உட்கொள்வதற்கு முன் செய்ய வேண்டும். உணவு உண்ட பிறகு மூன்று மணி நேர இடைவெளி வேண்டும்.

பஜகோவிந்தம்

# ஆலய பரிபாலன சபையின் கவனத்திற்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஆலய புனரமைப்புக்கென பரிபாலன சபையின் கோரிக்கைக்கு அமைய நிதியுதவி வழங்கப்படுகின்றது. எனினும் பரிபாலன சபையினர் முழுமையான செலவின விபரங்களை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வு நடவடிக்கைகளின்போது சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

ஆதலின் திணைக்கள நிதியுதவி பெறும் ஆலயங்கள் கீழ் குறித்தவாறு முழுமையான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

1. நிறைவேற்றப்பட்ட வேலை பற்றிய அறிக்கை (ஆலயக் கடிதத் தலைப்பில் தலைவர்/ செயலாளர் ஒப்பங்களுடன்).
2. செலவுக்கான பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகள் (வெள்ளைத் தாள்களில் ஒட்டிய வண்ணம்).
3. நிறைவேற்றிய வேலையைக் காட்டத்தக்க புகைப்படம்.
4. குறித்த நிதி, உரிய வகையில் செலவிடப்பட்டது என்பதை உறுதிபடுத்தக் கூடியவாறு குறித்த பிரதேச தொழில்நுட்ப உத்தியோகத்தர் பார்வையிட்டு வழங்கும் அறிக்கை.
5. புனரமைப்பை உணர்த்தத்தக்க இரண்டு புகைப்படங்கள்.

# புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் (இந்து கலாசாரம்) நியமனம்

பட்டதாரிப் பயிலுநர் பயிற்சிக்குப் பின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் III பதவிக்கு நியமனம் பெற்றவர்களுள் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்திற்கு இம்முறை 85 பட்டதாரிகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்களை இலங்கையின் பல பகுதிகளுக் கும் விரிவாக்கி செயற்படுத்தும் வண்ணம் மேற்படி உத்தியோகத்தர்கள் திணைக்களத் தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதன்படி திணைக்களத்தின் கீழ் இணைக் கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் விபரங்கள் மாவட்ட, பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக வருமாறு,

| இல | பெயர் | மாவட்டம் | அலுவலக முகவரி |
|---|---|---|---|
| 1. | திருமதி. சுஜீவனி சபாபதிபிள்ளை | அம்பாறை | பிரதேச செயலகம், நாவிதன்வெளி |
| 2. | திருமதி. சுஜித்ரா கந்தன் | அம்பாறை | பிரதேச செயலகம், காரைதீவு |
| 3. | செல்வி. சர்மிளா மகாலிங்கம் | அம்பாறை | பிரதேச செயலகம், திருக்கோவில் |
| 4. | செல்வி. கௌசளவாணி சிவலிங்கம் | அம்பாறை | பிரதேச செயலகம், கல்முனை |
| 5. | செல்வி. நிஷாந்தினி தேவராஜ் | அம்பாறை | பிரதேச செயலகம், ஆலயடிவேம்பு |
| 6. | திரு. கந்தசாமி நீலேந்திரன் | அம்பாறை | பிரதேச செயலகம், பொத்துவில் |
| 7. | திருமதி. லோகநாதன் சிவலோஜினி | அம்பாறை | பிரதேச செயலகம், சம்மாந்துறை |
| 8. | திரு. நடேசபிள்ளை பிரதாப் | அம்பாறை | மாவட்ட செயலகம், அம்பாறை |
| 9. | செல்வி. சிவதர்னி துரைராஜசிங்கம் | பதுளை | மாவட்ட செயலகம், பதுளை |
| 10. | திரு. யோகராஜா நிசந்தராசன் | பதுளை | பிரதேச செயலகம், பசறை |
| 11. | திரு. மயில்வாகனம் சூரியகுமாரன் | பதுளை | பிரதேச செயலகம், லுணுகல |
| 12. | திரு. குமாரசாமி ஜெயகாந்தன் | பதுளை | பிரதேச செயலகம், ஹப்புத்தளை |
| 13. | திரு. போரப்போடி கமலராசா | பதுளை | பிரதேச செயலகம், பண்டாரவளை |
| 14. | திரு. கைலாயபிள்ளை தசிகுமார் | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், வாகரை |
| 15. | செல்வி. சசிகலா பொன்னம்பலம் | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், வாழைச்சேனை |
| 16. | திருமதி. சரோஜினி பாலசுந்தரம் | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், மண்முனை - வடக்கு |
| 17. | திருமதி. யமுனா கிருஷ்ணப்பிள்ளை | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், செங்கலடி |
| 18. | திரு. தர்மலிங்கம் புண்ணியமூர்த்தி | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், கிரான் |
| 19. | செல்வி. உதயமலர் சிவஞானம் | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், வெல்லாவெளி |
| 20. | திருமதி. குமுதினி பரமசிவம் | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், களுவாஞ்சிகுடி |
| 21. | செல்வி. மேகலா தங்கவடிவேல் | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், பட்டிப்பளை |

| | | | |
|---|---|---|---|
| 22. | செல்வி. ஷர்மிளா கந்தசுவாமி | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், வவுணதீவு |
| 23. | திரு. ராசநாயகம் நிதர்ஜன் | மட்டக்களப்பு | கலாசார நிலையம், நாவற்குடா |
| 24. | செல்வி. கயல்விழி பரமநாதன் | மட்டக்களப்பு | பிரதேச செயலகம், ஆரயம்பதி |
| 25. | செல்வி. சிவானி சுந்தரம்பிள்ளை | காலி | மாவட்டச் செயலகம் |
| 26. | செல்வி. தெய்வலக்ஷ்சுமி மாணிக்கம் | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், கோப்பாய் |
| 27. | செல்வி. கலைமதி அருமைதுரை | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், தெல்லிப்பளை |
| 28. | திருமதி. தர்பனா சுதர்ஷன் | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், உடுவில் |
| 29. | செல்வி. சர்மிளா தம்பிப்பிள்ளை | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், பருத்தித்துறை |
| 30. | செல்வி. கைலைநாயகி பரந்தாமன் | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் |
| 31. | திருமதி. ஜெயசெல்வி சசிகுமார் | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், கரவெட்டி |
| 32. | திருமதி. ஞானேஸ்வரி துஷியந்தன் | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், காரைநகர் |
| 33. | திருமதி. விஜிதா தவசீலன் | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், வேலணை |
| 34. | திருமதி. உதயகலா ஜெயந்திரகுமார் | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை |
| 35. | திருமதி. அகல்யா ஜனார்தனன் | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், சங்கானை |
| 36. | திருமதி. நகுலா ரவீந்திரராசா | யாழ்ப்பாணம் | பிரதேச செயலகம், நல்லூர் |
| 37. | செல்வி. தர்ஷினி கேதாரப்பிள்ளை | களுத்துறை | மாவட்டச் செயலகம் |
| 38. | திருமதி. கே. தனலக்சுமி | கண்டி | மாவட்டச் செயலகம் |
| 39. | திருமதி. ரேவதி இளையராஜா | கண்டி | பிரதேச செயலகம், நாவலப்பிட்டி |
| 40. | திரு. சீனித்தம்பி தில்லைவாசன் | கண்டி | பிரதேச செயலகம், கரலியட்ட |
| 41. | திரு. முருகேசு புருசோத்தமன் | கண்டி | பிரதேச செயலகம், உடப்பலாத |
| 42. | திருமதி. நடேசன் மலர்விழி | கண்டி | மாவட்டச் செயலகம் |
| 43. | திருமதி. நிரோஜா பாலவிசாகன் | கிளிநொச்சி | பிரதேச செயலகம், பளை |
| 44. | செல்வி. கிருஷ்ணகுமார் நாகேந்திரன் | கிளிநொச்சி | பிரதேச செயலகம், கண்டாவளை |
| 45. | திருமதி. கிரிஜா பத்மராஜ் | கிளிநொச்சி | பிரதேச செயலகம், பூநகரி |
| 46. | செல்வி. ஜெயமதி சின்னத்துரை | கிளிநொச்சி | பிரதேச செயலகம், கரைச்சி |
| 47. | செல்வி. ரஜிதா அரிச்சந்திரன் | கிளிநொச்சி | மாவட்டச் செயலகம் |
| 48. | செல்வி. ரஞ்சன் சுபாஷினி | குருணாகல் | மாவட்டச் செயலகம் |
| 49. | செல்வி. ஜீவிதா ஆனந்தராசா | மன்னார் | மாவட்டச் செயலகம் |
| 50. | செல்வி. தேவராசா சுபேந்தினி | மன்னார் | பிரதேச செயலகம், மாந்தை மேற்கு |
| 51. | திரு. கிருஷ்ணபிள்ளை ஜெயராசா | மாத்தளை | மாவட்டச் செயலகம் |
| 52. | திரு. முருகமூர்த்தி சுபாஸ்கரன் | மாத்தளை | மாவட்டச் செயலகம் |
| 53. | திரு. கருணாநிதி திசன் | கேகாலை | மாவட்டச் செயலகம் |
| 54. | திரு. நடராஜா ருசிகாந்தன் | கேகாலை | மாவட்டச் செயலகம் |
| 55. | செல்வி. ராஜேஸ்வரி கந்தசாமி | முல்லைத்தீவு | பிரதேச செயலகம், கரைத்துறைப்பற்று |
| 56. | திருமதி. யசிதிரா சிவதாசன் | முல்லைத்தீவு | பிரதேச செயலகம், துணுக்காய் |
| 57. | செல்வி. அஜிதா யோகநாதன் | முல்லைத்தீவு | பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு |
| 58. | செல்வி. செல்வநாயகி செல்வநாயகம் | முல்லைத்தீவு | பிரதேச செயலகம், ஒட்டிசுட்டான் |
| 59. | திருமதி. வி. கல்பனா | நுவரெலியா | பிரதேச செயலகம், அம்பேகமுவ |
| 60. | திரு. கந்தசாமி பத்தினிதாசன் | நுவரெலியா | பிரதேச செயலகம், கொத்மலை |

| | | | |
|---|---|---|---|
| 61. | திரு. வல்லிபுரம் திருவானந்தராசா | நுவரெலியா | மாவட்டச் செயலகம் |
| 62. | திரு. ஆறுமுகம் லெவ்விதன் | பொலந்நறுவை | மாவட்டச் செயலகம் |
| 63. | திரு. நவரட்னம் அனூஜன் | புத்தளம் | மாவட்டச் செயலகம் |
| 64. | திரு. குணரட்னம் சுதாகரன் | இரத்தினபுரி | மாவட்டச் செயலகம் |
| 65. | திருமதி. பாலன் சுபாஷினி | திருகோணமலை | பிரதேச செயலகம், மூதூர் |
| 66. | திரு. தருமரட்னம் கஜேந்திரன் | திருகோணமலை | பிரதேச செயலகம், பட்டனமும் சூழலும் |
| 67. | செல்வி. நாகையா ஸ்ரீபிரியா | திருகோணமலை | பிரதேச செயலகம், சேருவில |
| 68. | செல்வி. ராஜேந்திரன் சாரதா | திருகோணமலை | பிரதேச செயலகம், வெருகல் |
| 69. | திரு. நேசதுரை பிருந்தாவன் | திருகோணமலை | பிரதேச செயலகம், குச்சவெளி |
| 70. | திரு. புண்ணியமூர்த்தி வசந்தன் | திருகோணமலை | பிரதேச செயலகம், தம்பலகாமம் |
| 71. | செல்வி. சுமனலதா சரத்பாபு | திருகோணமலை | பிரதேச செயலகம், கிண்ணியா |
| 72. | செல்வி. பிரபா பத்மநாதன் | வவுனியா | மாவட்டச் செயலகம் |
| 73. | செல்வி. ரதி யோகராஜா | | |
| 74. | திருமதி. குமாரதாஸ் பாமினி | | |
| 75. | செல்வி. சரஸ்வதி விநாயகமூர்த்தி | | |
| 76. | திருமதி. சஜிதா ரூபன்ராஜ் | | |
| 77. | செல்வி. உசாந்தினி அம்பிகைபாலன் | | |
| 78. | செல்வி. கிரிசுதா ராஜரட்னம் | | |
| 79. | திரு. அருளப்பா அன்பன் | | தலைமைக் காரியாலயம் கொழும்பு |
| 80. | திரு. அருளம்பலம் கருணாகரன் | | |
| 81. | திரு. யோகநாதன் சதேசா | | |
| 82. | திரு. மகாலிங்கம் குணரட்னம் | | |
| 83. | திருமதி. சிறிதேவி சுரேந்திரராஜ் | | |
| 84. | செல்வி. செல்வராஜா செல்வமனோகரி | | |
| 85. | திருமதி. கனகராஜா அருள்மொழி | | |

## நேரமில்லை! நேரமில்லை!

இப்போது எல்லோரும் எதற்கெடுத்தாலும் நேரமில்லை. நேரமில்லை என்று சொல்லிக் கடவுளைக் கும்பிடாமல் அவர்கள் போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறார்கள். இது சரியா? என்று திருமுருக கிருபாந்த வாரியாரிடம் ஒருமுறை ஓர் அன்பர் கேட்டார். அதற்கு அவர் நேரம் இல்லை என்று சொல்வதையே நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஏன் தெரியுமா? நான் காரிலோ, ரயிலிலோ, விமானத்திலோ தினமும் இருநூறு முந்நூறு மைல்கள் பயணம் செய்கிறேன். அப்படி இருந்தும் தினமும் இரண்டு மணி நேரம் பூஜை செய்கிறேன். ஆறு மணிக்கு ரயில் என்றால் மூன்று மணிக்கு எழுந்துவிடுவேன். ஐந்தரைக்கும் பூஜை முடித்துவிடும். முகச் சவரம் பண்ணிக்காமல் இருக்கிறாங்களா- குளிக்காமல் இருக்கிறாங்களா? மலசலம் கழிக்காமல் இருக்கிறாங்களா? இதுக்கெல்லாம் நேரம் இருக்கும் போது இறைவனை நினைக்க மட்டும் எப்படி நேரம் இல்லாமல் போகும்? சோம்பல்தான் காரணம். நாம் சுறுசுறுப்பாக இறைவனைச் சிறிது நேரம் கும்பிட்டாலும் ஆத்ம திருப்தி உண்டாகும் என்றார்.

**வானோர் வாக்கு**

# பிரார்த்தனை : பத்து அம்சங்கள்

பிரார்த்தனையின் நோக்கம் என்ன? எப்படி பிரார்த்தனை செய்ய வேண்டும்? யாருக்காகச் செய்ய வேண்டும்? இது பற்றி ஆங்கில தத்துவமேதையும், ஆன்மிகக் கருத்துக்களை அழகாக அளித்தவருமான டாக்டர் நார்மன் வின்செண்ட் பீல் பின்வருமாறு கூறுகிறார்: .

1. நாள்தோறும் - சில நிமிடங்களைப் பிரார்த்தனைக்காக ஒதுக்கி வையுங்கள். அப்போது ஒன்றும் பேசாதீர்கள். கடவுளைப் பற்றி மட்டும் நினைத்துப் பழகுங்கள்.
2. பிறகு இயல்பாக சாதாரண வார்த்தைகளில் உங்கள் மனதில் இருப்பதைக் கடவுளிடம் சொல்லுங்கள்.
3. பஸ்ஸில் பயணம் செய்யும் போதும், அலுவலகங்களில் வேலை செய்து கொண்டிருக்கும் போதும் கடவுள் உங்கள் எதிரே உட்கார்ந்திருப்பதாகப் பாவனை செய்துகொண்டு, குட்டிப் பிரார்த்தனைகளை அடிக்கடி செய்யுங்கள்.
4. எப்போதும் "அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்". கடவுள் ஏற்கனவே கொடுத்ததற்கு நன்றி செலுத்துங்கள்.
5. உங்கள் பிரார்த்தனைகள் உங்களுக்குப் பிரியமானவர்களுக்குக் கடவுளின் அன்பையும், பாதுகாப்பையும் சம்பாதித்துத் தரும் என்று உறுதியாக நம்புங்கள்.
6. பிரார்த்தனையின் போது கசப்புணர்ச்சியும், பகைமை உணர்ச்சியும் மனதில் தலைதூக்க இடம் கொடுக்காதீர்கள்.
7. கடவுளிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள். ஆனால் அவர் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருங்கள். நீங்கள் கேட்டவைகளைவிட, கேட்பவை களைவிட அவர் கொடுத்ததும், கொடுப்பதும் எப்போதும் சிறந்தாகவே இருக்கும்.
8. ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு இயன்றதைச் செய்யுங்கள். பலன் தருவதும், தராததும் அவர் விருப்பம்.
9. உங்களைப் பிடிக்காதவர்களும், உங்களைச் சரியாக நடத்தாதவர்களும் நலம் பல பெற்று வாழப் பிரார்த்தனை செய்யுங்கள். ஆன்மிக சக்தியின் முதல் விரோதி வெறுப்புணர்ச்சி என்பதை உணருங்கள்.
10. யார் யாருடைய நன்மை வேண்டிப் பிரார்த்தனை செய்வது என்று எண்ணிக் கொள்ளுங்கள், எவ்வளவு அதிகமான பேருக்கு - குறிப்பாக, சம்பந்தப்படாதவர்களுக்கும் - பிரார்த்தனை செய்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக உங்களுக்குப் பலன் கிடைக்கும்.

நாம் பிறருக்காகப் பிரார்த்தனை செய்யும்போது ஆண்டவன் நமக்கு மிகவும் அருகில் வருகிறான் என்பதை உணருங்கள்.

## நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் நடைபெற்ற இந்துக் கட்டடக் கலைச் செயலமர்வு













## திருகோணமலையில் நடைபெற்ற
## நாட்டாரியல் நிகழ்வு













திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற
சமஸ்கிருத வகுப்பு ஆரம்பமும் 'சமஸ்கிருத இலகு போதம்' நூல் வெளியீடும்














## புண்ணிய கிராம நிகழ்வு













## கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் நடைபெற்ற
## தர்மாசிரியர் பயிற்சிக் கருத்தரங்கு













கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற
அறநெறிப் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு













## இரத்தினபுரி சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற சிவராத்திரி நிகழ்வு













## குளியாப்பிட்டியில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுடம் தேசியக் கண்காட்சியில் இந்தசமய திணைக்கள காட்சியறை நிகழ்வு













## கேகாலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற சுதந்திர தின விசேட பூசை









## இரத்தினபுரி சிவன் கோயிலில் நடைபெற்ற மாட்டுப் பொங்கல் விழா





இந்து ஆலய கும்பாபிஷேக நிதியுதவி



மட்டக்களப்பில் நடைபெற்ற தியானப் பயிற்சி



யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் இடம்பெறும்
யோகாசன பயிற்சி வகுப்புக்கள்





நாவிதன் வெளியில் நடைபெற்ற திருவள்ளுவர் குருபூசை தின நிகழ்வு





# கிழக்கிலங்கையின்
# தேரோட்டக் கோயில் பாரம்பரியங்கள்

சைவப்புலவர் சு. துஷ்யந்த்
மட்டக்களப்பு

## அறிமுகம்

இலங்கையில் அமைந்துள்ள சிவத் தலங்கள் அனைத்திலும் மூலமூர்த்தியாக விளங்குவது சிவலிங்கமாகும். இவை பிரதிஸ்டை செய்யப்பட்டு பூசிக்கப்பட்டு வருவனவாகும். ஆனால் பிரதிஷ்டை செய்யப்படாமல் தானாகத் தோன்றிய சுயம்புலிங்கங்களைக் கொண்டமைந்த கோயில்கள் இலங்கையிலே இரண்டுதான் உள்ளன. அவற்றுள் ஒன்று மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் அமைந்துள்ளது மற்றையது முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் அமைந்துள்ளது. இவற்றுள் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம் வீராகமக் கோயில் என்றும், தேசத்துக் கோயில் என்றும், தேசத்தின் தேரோட்டக் கோயில் என்றும், சுயம்புலிங்கக் கோயில் என்றும் பற்பல சிறப்புக்கள் வாய்க்கப் பெற்று ஈழத்தில் புகழ் பூத்த சிவாலயங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது.

## 01. கர்ண பரம்பரைக் கதை

கோயிலின் பூர்வீகம் தொடர்பாக இப்பிரதேசத்தில் செவிவழிக் கர்ணபரம்பரைக் கதைகள் பலவும் நிலவுகின்றன. அக்கதைகளுள் ஒன்று இவ்வாறு கூறப்படுகின்றது.

''இப்பிரதேசத்தில் தேன் எடுக்கச் சென்ற வேடர்கள் கொக்குநெட்டி மரத்தை வெட்டிய போது லிங்கமொன்று தென்பட்டதைக் கண்டு அவ் இடத்தில் இலை குழைகளால் மண்டபம் நிலை நாட்டி வழிபட்டதன் மரபே இக்கோயில்.''

## இப்பிரதேசத்தில் இக்கோயிலைப் பற்றி நிலவும் மற்றுமொரு கதை

''கதிர்காமத்தை தரிசிக்க இந்திய நாட்டிலிருந்து வந்த கொக்கட்டியார், முத்துலிங்கர் என்ற இரு தபோதனர்கள் தலயாத்திரை சென்றனர். அவர்கள் கொக்கட்டிச் சோலையில் தங்கிய போது கொக்கட்டியார் இறைபதம் அடைந்தார். பின்னர் முத்துலிங்கர் அவரைச் சமாதியில் இருத்திச் சென்றார். அவ்விடமே மேற்படி லிங்கம் காணப்பட்ட இடம் எனவும் கூறப்படுகின்றது.''

## 02. வரலாற்றுச் சிறப்பு

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் குணசிங்கன் சரித்திரம் ஓதப்பட்டிருக்கின்றது. அதில் உலகநாச்சியின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட கோயிலாக கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம் விளங்குகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரியகல்வெட்டுப் பாடலில் மட்டக்களப்பு நாட்டின் நிதியதிபனாகிய இலங்கைச் சிங்கனுக்கும் சோபன முத்துக்கும் கலி பிறந்து 3985 இல் தரும சிங்கன் என்பவன் மகனாகப் பிறந்தான். இவன் தோப்பாவை அரசன் சேனனது புத்திரி பவளமுத்து என்பவளைத் திருமணம் முடித்தான் என்றும், இவனுக்கு நீண்ட காலமாகவிருந்த புத்திர

ரில்லாத குறையைத் தீர்ப்பதற்கு கொக்கட்டிச் சோலைப் பகுதியினை கல்லினால் கட்டி அந்தணர் பத்ததியின்படி மதில் மண்டபங் களுமியற்றி மூன்று ரதங்களை சோழ தேசத்திலிருந்து அழைப்பித்து அபிஷேகங் களும் செய்து, சிறைக்குடிகளையும் வகுத்தான் என்று சொல்லப்படுகின்றது.

## 03. சுயம்புலிங்கச் சிறப்பு

ஆதி மனிதர்கள் ஆதியில் மரங்களை வழி பட்டனர் பின்னர் மரங்களின் அடியில் தெய்வங்கள் உறைவதாக எண்ணி மரத்தின் அடிப்பகுதியை வழிபட்டனர். இது சங்க கால தமிழ் மக்களிடையேயும் நிலவி வந்திருப்பதற்கு கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்று சொற்களும் காரணம் பகருகின்றன. பட்ட மரத்தின் அடியில் ஒரு கல்லை வைத்து வழிபடுகின்ற வழக்கம் நாளடைவில் லிங்க வழிபாடாக மெரு கேறியது எனலாம். மட்டக்களப்பு தேசத்தில் வெருகல், கோயிற்போரதீவு, கொக்கட்டிச் சோலை, மண்டூர், திருக்கோயில் போன்ற இடங்களில் உள்ள கோயில்களெல்லாம் ஆரம்ப காலத்தில் மரத்தின் அடிப்பகுதி களிலிருந்தே தோன்றியவை என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

கொக்கட்டி மரத்தின் அடியில் சிவ லிங்கம் கண்டெடுக்கப்பட்ட கதையை நினைவு கூரும் போது ஆதிகால வணக்க முறையின்படி மரத்தின் அடியில் இருந்த லிங்கம் மண்ணால் மூடப்பட்டு காலமும் நேரமும் கனிந்ததும் அந்தலிங்கம் வெளிப் பட்டிருக்க வேண்டும் என்பது உண்மையாக இருக்கலாம். இவ்வாறு இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட பேரன்பால் தானாகத் தோற்றமளிக்கும் லிங்கத்தை சுயம்புலிங்கம் என்று அழைப்பர். அவ்வாறான லிங்கம் ஆதியானது கொக் கட்டிச்சோலையில் எழுந்தருளிய லிங்கமும் அத்தகைய ஒன்றே. இத்தகைய சுயம்பு லிங்கம் பல வகைப்பட்ட நிகழ்வுகளால் சிதைவுறுனினும் கூட பிரதிஷ்டை முதலிய கிரியைகளின்றி மீண்டும் வழிபடத் தகுதி பெற்ற லிங்கமாகும். இந்தியாவில் அறுபத் தெட்டு இடங்களில் சுயம்பு லிங்கங்கள் உள்ளன என்று அறியப்படுகின்றது. இலங்கையில் கொக்கட்டிச்சோலை, ஒட்டு சுட்டான் எனும் இரு இடங்களில் மட்டும்தான் சுயம்பு லிங்கங்கள் உள்ளன. இத்தகைய சுயம்பு லிங்கங்கள் பவித்திரமானவை. மிகமிகப் புனிதமானவை. மகிமை வாய்ந்தவை. இதனால் இவ் இலிங்கத்தை தாங்கி நிற்கும் கோயில்களும் பழமையும் சிறப்பும் வாய்க்கப் பெற்றவை.

## 04. நந்தியின் கல்லுருவம் உயிர் பெற்ற அற்புதம்

இலங்கையைப் பறங்கியர் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்கள் பல சைவ ஆலயங்களை இடித்தளித்தார்கள். மட்டக்களப்பிலும் இவர்களின் ஆதிக்கம் பரவிய காலத்தில் இவர்களால் பல இந்து ஆலயங்கள் தகர்க்கப் பட்டன. அவர்களால் தகர்க்கும் குறிக்கோ ளுடன் வந்தும் தகர்க்க முடியாது திரும்பிச் சென்ற தலம் என்ற சிறப்பை கொக்கட்டிச் சோலைப்பதி பெற்று விளங்குகின்றது.

இக் கோயிலின் மூன்றாவது மண்டபத் திலே நந்தியிருப்பதை நோக்கிய படைத் தளபதி பூசாரியை நோக்கி நந்தி புல் தின்னுமா? அச்சமா பதில் சொல்லடா! என்றான் பூசாரியும் 'ஓம்' என ஓதினார். நாளை மறுதினம் பூசை முடிந்ததன் பிற்பாடு பூசாரி கொடுத்த அறுகம்புல் கட்டை, வாலை முறுக்கியெழுந்து தின்று சாணமு

மிட்டுப் படுத்துக் கொண்டது. இதனைக் கண்டு தளபதியும் கை கூப்பி நின்றான். அவ்வாலயத்தை அழியாது சென்றான் என்று இக்கோயில் தல புராணக் கதையாக இன்றும் பேசப்பட்டு வருகின்றது. இக்கதை இக் கோயிலின் முன் மண்டப மேல் சுவரில் ஓவியமாகவும் தீட்டப்பட்டிருக்கின்றது.

### 05. தேர்ச்சிறப்பும், தேர் ஆழ்ந்த பள்ளமும்

மட்டக்களப்பு மன்னனான தர்மசிங்கன் என்பவன் கலிவருடம் 4060 இல் (கி.பி. 958) சோழநாட்டுச் சிற்பிகளை வரவழைத்து மூன்று தேர்களைச் செய்தான் என்று மட்டக் களப்பு மான்மியம் கூறுகின்றது. மட்டக் களப்பு மாநிலத்தில் முதல்முதலில் தேரோடிய கோயிலாகையால் இன்றும் இத்தேசத்தவரால் 'தேரோட்டக் கோயில்' என்று சிறப்பாக அழைக்கப்பட்டு வருகின்றது.

இத்தேர்களைப் பற்றி பழம் பெரும் கதையும் இத்தேசத்தில் நிலவி வருகின்றது.

'தேரோடும் நாளிலே முத்தேர்களும் நகர்ந்து கொண்டு செல்லும் போது கோயிலின் தென்மேற்கு மூலையின் அருகில் சென்றதும் இறுதியாக நகர்ந்து சென்ற தேர் நகராது அடம் பிடித்தது. இசைந்த பல முயற்சிகள் எத்தனைதான் எடுத்த போதிலும் செய்யவழி வேறின்றி ஊர்ந்த இரு தேர் களையும் உரிய இடத்தில் நிறுத்திவிட்டு மறு நாள் காலையில் பார்த்த பொழுது தேரைக் காணாது திகைத்துப் போயினர். தேர் ஓடிய தடத்தை பின் தொடர்ந்தவர்கள் அது நெடி தாழ்ந்த வாவியினுள் வீழ்ந்த உண்மையைக் கண்டறிந்தனர். அன்று முதல் அவ்வாவியை 'தேர் தாழ்ந்த பள்ளம்' என்று திசை நோக்கிப் பார்க்கின்றார்கள்' தற்போது பிள்ளையார் தேரும், சித்திரத்தேருமே இழுக்கப்படுகின்றன. இவை இரண்டும் இலுப்பை மரத்தினாற் கட்டப்பட்டவை. இலுப்பை நீரால், பூச்சி வண்டுகளால் பாதிக் கப்படாத மரமாகையினாலும், இயற்கை யாகவே அம் மரத்தில் எண்ணெய்ப்பசை இருப்பதாலும் இன்றுவரை தேர்களும், அவற்றிலுள்ள சிற்பங்களும் பாதுகாப்பான நிலையில் பேணப்பட்டு வருவது மற்றுமோர் சிறப்பாகும். கொக்கட்டிச்சோலைப் பதியின் சிற்பங்களை நோக்கும் போது இவ்விரு தேர்களிலுமுள்ள மரத்தினாலான முழு வடிவச் சிற்பங்களும், புடைப்புச் சிற்பங் களுமே எம் கண்முன் நிற்கின்றன. அத்துடன் இலங்கையில் உள்ள தேர்களில் இவையே மிகவும் புராதனமான தேர்கள் என்று வரலாற்றுப் பெருந்தகை சி. பத்மநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ள கருத்தும், இத்தேவஸ்தானத் தேர்ச்சிறப்பை பறை சாற்றுகின்றது.

இங்கு நடைபெறும் தேரோட்ட நிகழ்வு பல யதார்த்த பூர்வமான மரபுகளையும், தனித்துவங்களையும் உணர்த்தியே ஓடுகின்றது. ஊர் கூடினால் தான் தேர் இழுக்கலாம் என்பதற்கொப்ப இத் தேவஸ்தானத்திலும் தேசமக்கள் திரண்டால் தான் கொக்கட்டியானின் தேரோடும் என்பது அம்மண்ணின் மரபாக இருந்து வருகின்றது. தேரோட்டம் நடைபெறுவதற்கு முன்பு தேரை எண்ணை பூசி மெழுக்கி பிள்ளையார் தேரில் மூன்று விதான அடுக்குகளாலும், சித்திரத்தேரில் ஐந்து விதான அடுக்கு களாலும் பட்டு வர்ணத் துணிகளால் அலங்காரம் செய்வார்கள். தேருக்குரிய வடக்கயிறு கன்னங்குடா மக்களால் எடுத்து வரப்பட்டு, பின்பு கயிறு கட்டிய தேரினை மூன்று வண்ணக்குமாரரின் கைகளிற் கொடுப்பர். அவர்கள் அதனைத் தேசத்து மக்களிடம் கொடுத்ததும் 'அரோகரா' என்னும் பேரொலியுடனும், அடியார்களின்

கற்பூரக் கட்டிகளின் விசிறல்களுடனும் மண்ணில் புதையுண்ட தேர் மண்மேல் பட்டும் படாமலும் ஆடி அசைந்து செல்லும் காட்சி, 'திருவாரூர்த் தேரழகை' நெஞ்சில் உரசிச் செல்வது போல் அமையும். இத்தேரில் வீதி செப்பமிடப்பட்டிருக்கும் ஆனால் அன்று தொட்டு இன்று வரை மண் வீதியில் தேரோடும் தேவஸ்தானமாக விளங்கு வதையிட்டு கொக்கட்டியானின் பெருமை சொல்லவேயரியதாய் உள்ளது. இவ்வாறு கிழக்கிலங்கை மக்களின் ஒன்றிணைப்பையும், ஒற்றுமையையும், புனிதத்தன்மையையும் ஒன்றுபடுத்தும் ஒரு சமூக விழாவாகவே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரரின் தேரோட்டத்தைத் தரிசிக்க முடிகின்றது.

### 06. வீராகமக் கோயில்

ஈழத்திலே வீராகமச் செல்வாக்குக்குட்பட்ட ஒரேயொரு கோயிலாக அன்று தொட்டு இன்றும் விளங்குவது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமாகும். இது கலிங்க மாகோனின் ஆதிக்கத்தினால் பரவியிருக்க லாம் என்று நம்பப்படுகின்றது. வீராகம ஏடுகள் இன்று கிடைத்தில. ஆனால் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் கர்நாடக தேசம். தமிழகம் உட்பட்ட பல பிராந்தியங்களில் வீராகம மரபுகளைத் தழுவிய வீரசைவ மரபுகளும் பரவியிருந்தன.

பொலநறுவைக் காலத்தின் இறுதிக் கட் டத்தின் கலிங்க மாகோனின் ஆட்சி நிலவியது. அக்காலத்தில் சமயப் பூசலும், பகைமையும் மேலோங்கியிருந்தது. மாகோனும் அவனுடைய ஆதரவாளரிற் சிலரும் தக்கணத்திலே 12ஆம் நூற்றாண்டில் உதயமாகிப் பரவிய வீரசைவக் கோட்பாடு களினாலும், அது ஏற்படுத்தியிருந்த சமய சமுதாயப் புரட்சியினாலும் கவரப் பட்டிருந்தனர். தக்கணத்தில் வீரசைவர் சமணர்களுக்கு விரோதமாகச் செயற் பட்டனர். இலங்கையில் மாகோனும் அவனுடைய ஆதரவாளர்களும் பௌத்த சமயத்திற்கு விரோதமாகச் செயற்பட்டனர். இந்தச் சூழ்நிலையிலேயே மட்டக்களப்பு தேசத்தில் வீரசைவ மரபை வளர்த்தான் என்று மட்டக்களப்பு மான்மியத்தை துருவுரும் போது அறிய முடிகின்றது. இவனுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஈழத் தில் மட்டுமன்றி இக்கோயிலிலும் வீரசை வம் செல்வாக்குப் பெற்று விளங்கியது. இவனது வீரசைவப் பணியை அரனூழியம் வகுத்த கல்வெட்டு மேல்வருமாறு பறை சாற்றும்.

*'அந்தணர்கள் மாகோனைக் கண்டு போற்றி*
*அரனகத்து ஊழியர்கள் அகன்று நாகர்*
*பந்தமதில் சேர்ந்து கயல் பிடித்துண்டு*
*பண்டு நாள் கலிங்கனிட்ட கடமை மாற்றி*
*சந்தி சந்தி நாமமிட்டு அரனைத் தூற்றித்*
*தசரதன்றன் மகன் ராமன் தன்னைப் போற்றி*
*இந்து தமிழ் இல்லையென எங்கள் முன்பு*
*ஈட்டித் தழும் பூட்டித் தந்திகழ்ந்து செல்வார்.*

*இகழ்ந்தவர்க ளனைவரையும் மாகோன் கண்டு*
*இரு விழியை எடுத்தடித்து இடுக்கண் செய்து*
*மகிழ்ந்து அரிநாமமிட்டோர் தமைக்கழுவில்*
*வைத்த பின்னர் சைவமதம் வளர்ந்து ஓங்க*
*புகழ்ந்து சிவ ஆலயங்கள் பூத்திலங்க*
*பூசகர்கள் சொற்படியே ஊழியம் புரிவோர் தம்மை*
*செகந்துதிக்க கோவைசியர் தன்னி லேமு*
*சிறையாக்கித் திருநாமம் செப்பக் கண்டார்.'*

மாகோனின் ஆட்சிக்கு முன்பு உலக நாயகி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரர் கோயிலுக்குப் பூசை செய்வதற்காக வடநாட்டுக் கொல்லிடத்திலிருந்து ஆரங்கட்டுங் குடிகள் பதின்மரையும், பட்டர்கள் மூவரையும் வரவழைத்து கோயிலிற்குப் பூசகர்களாக நியமித்திருக் கிறாள். இவளது காலம் கலிசகாப்தம் 3500 ஆகும். மட்டக்களப்பு படையாட்சி

குலத்தினை ஸ்ரீ குலன், புவனத்திருப்பணி (திருக்கோயில்), உகந்தைத் திருப்பணி, சங்குமன்கந்தைத் திருப்பணி, செட்டித் திருப்பணி (வீரமுனை), போர்முனைத் திருப்பணி (போரதீவு), தாண்டத்திருப்பணி (கொக்கட்டிச்சோலை) முதலிய ஆறு திருப் பணிகளுக்கும் பூசை புரிவதற்காக சோழ நாட்டிலிருந்து வீரசைவ சங்கமக் குருமாரை வரவழைத்து நியமித் திருக்கின்றாள்.

## 07. மாகோன் அரனூழியம் வகுத்த சிறப்பு

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் மாகோன் என்றும் மகாவம்சத்தில் கலிங்க மாகோன் என்று குறிப்பிடப்படும் மன்னனின் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பிலே சமய, சமுதாயப் பண்பாட்டு நிலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாயின. அவற்றுள் வீர சைவத்தின் பரம்பல், சமுதாயக் கட்டமைப்பு, தேசசமூக வழமைகள், கோயிற் திருப்பணிகள் என்பன குறிப்பிடத்தக்கவை.

மட்டக்களப்பு தேசத்து ஆலயத் தொழும்புகள் மாகோனால் வகுக்கப்பட்ட விதத்தை 'குளிக்கல் வெட்டு' முறையிலும், 'பங்கு கூறும் கல்வெட்டு', 'பங்கு தடுக்கும் கல்வெட்டு' என்பனவற்றிலும் கண்டு கொள்ள முடிகின்றது.

'குளிக்கல்வெட்டு' முறையிலே 5 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 2 ஆம், 3 ஆம் பாடல்களில் ஆலயக் கடமைகளுக்கென மாகோன் வகுத்த ஏழு குடிகளைப் பற்றிக் கூறப்படுகின்றது. அக்குடிகள் வருமாறு, கண்டன் குடி, சருகுபில்லி குடி, கட்டப்பத்தன் குடி, கவுத்தன் குடி, அத்தியாயன் குடி, பொன்னாச்சி குடி, வயித்தி குடி முதலியன வாகும். இதனை இப்பாடல் கூறுகின்றது.

*கண்டனொடு சருகு பில்லி கட்டப்பத்தன்*
*கருதரிய கவுத்தனு மத்தியாயன்*
*மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தியென்று*
*கோவசியர் மக்களிலே வருணமாக்கிப்*
*பண்டு முறை தவறாமல் எழுகுடியாய்ப்*
*பகுத்தீசர் பணி புரியப் பரவணியாய்*
*அண்டர் தமைச் சாட்சி வைத்தத் தத்தம் வாங்கி*
*அரனகத்து ஊழியராய் அமைத்துச் சொல்வார்*

4வது பாடலில் ஏழு குடியினரும் செய்ய வேண்டிய கோயிற் தொழும்புகள் என்ன வென்பது இப்பாடலிலே குறிப்பிடப் பட்டுள்ளது.

*சொல்லறிய விளக்கேற்றல் பூவெடுத்தல்*
*தூரசுற்றல் சாணமிடல் அணிவிளக்கல்*
*நல்ல மலர் மாலைக் கட்டல் மேளமிட்டல்*
*நற் சந்தன மரைத்திடுதல் நெல்லுக்குத்துதல்*
*துல்லிய மாய் வளர் சிவிகை ஏந்திச் செல்லல்*
*தாளிகட்டல் அமுதுவைத்தல் முதன்மைப் பார்ப்பான்*
*வல்லபதம் நீர் வார்த்தல் அகத்தில் தொண்டு*
*புரியுமென்று மாகோனும் வகுத்துப்பின்னும்*

5வது பாடலிலே 4வது பாடலில் குறிப்பிடப்பட்ட பாடல்களில் வருகின்ற சட்டதிட்டங்களை மீறுவோருக்கு என்ன என்ன தரத்திரிங்கள் வந்து சேரும் என்ற செய்திகளையும் மாகோன் வரைந்து வைத் துள்ளான். இவ்வாறு மட்டக்களப்பெங்கும் தமிழ்சைவம் தழைக்கப்பாடுபட்டான்.

இச்சட்டதிட்டங்கள் அன்றையக் கோயில் நடைமுறைகளில் இருந்து வந்துள்ளன. தற்போது இம்முறைகள் மாறி வருகின்ற பொழுதிலும் கொக்கட்டிச் சோலைப்பதி மட்டும் அதே சட்டதிட்டப் பாரம்பரியத்துடன் இயங்கி வருவது சிறப் பிற்குரியதாகும்.

'பங்கு கூறல்' கல்வெட்டுப் பாடலில் ஆலயத் திருவிழாக்களின் போது 'வரிசை' வாங்குவோர் யார் யார் என்பது முன்னுரிமை அடிப்படையில் மாகோனால் திடம் செய்யப் பட்டுள்ளது. அப்பாடல் வருமாறு.

ஆரார்க்கு முன் பின் அளிப்ப தோதென
திறலோன் கலிங்கன் செப்பினன் பெரிய
திருப்பதி வாசல் அறிமுயர் வேதம்
நம்பியறி திருப்பாட்டு சரிகை சந்நாசம்
தார் வளர் தேசம் வன்னிமை வரிசையா
யுலகுறு வருகுரு நாதர் பூ பாலன்
பூபால கோத்திமை பூவினில் வசியன்
பாவலர் புகழும் பகுதி புன்னாலை
மண்முனை மட்ட வழர்வுறு களப்பது
பெண் பெறு நாடு பேர் பெறு நகரம்

இவ்வாறு பதினெட்டுச் சிறைகளும் பங்கு பெறும் திட்டங்களை வகுத்த மகோன், கூறியபடி முற்குகர் என்ற மக்கள் நிர்வாகக் கடமைகளைச் செய்துவர, கோயிலின் உட் கடமைகளை வேளாளர்களும், வெளிக் கடமைகளை கோயிலாரும், அவர்களோடு கூடிய ஏனைய சிறைகளும் மிகக் கட்டுக் கோப்புடனும், முறைப்படியும் செய்து வர வேண்டியது கட்டாயமானதாகும். இவ் மாகோனின் அரன் ஊழியம் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரக் கோயிலின் திருப்படைப்பத்ததியிலே சுவாமி சூகர வேட்டைக்குச் செல்லுதல், பன்றி குத்தல் பின் அவ்விடத்திலேயே தேசத்தின் எல்லாச் சாதியினரையும் நினைவு கூர்ந்து அவர்களின் தொண்டின் நிமிர்த்தம் கஞ்சி முட்டி கூறுதல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகத் தற்போதும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க தாகும். இவ்வாறு கஞ்சி முட்டிகள் வைத்து வழிபடும் மரபு தேரோட்டம் போன்றன மாகோனால் ஆரம்பிக்கப்பட்டவையாகும் பூரிஜெகந்நாத கோயிலின் நடைமுறைகளில் மகா பிரசாதம் எனப்படும் சோறு கறியை முட்டியில் வைத்து வழிபடுதல், தேரோட்டத் திகதி குறித்தல் என்பனவும் கொக்கட்டிச் சோலைப்பதியுடன் ஒத்துப் போவதாக அமைந்துள்ளது. இவற்றைப் பார்க்கும் போது ஈழத்தின் சைவ சமய வளர்ச்சியில் குளக்கோட்டன், கஜபாகு மகா ராசனின் பணிகளுக்கீடான பணிகளைப் புரிந்து தேசத் திலே சைவசமயம் செழிக்கப் பாடுபட்ட மன்னன் கலிங்க மகோன் என்றால் அது மிகையாகாது எனலாம்.

## 08. திருவிழாக்களும், நிவந்தங்களும்

கோயிலின் வருடாந்த உற்சவம் ஆரம்ப காலங்களில் பங்குனி உத்தரத்தைத் தீர்த் தோற்சவ நாளாகக் கொண்டு நடைபெற்றது. பின்நாளில் தேசத்து வன்னிமையால் ஆவணி மாதத்து உத்திரத்தில் கொடியேற்றப் பட்டு பூரணையை அடுத்த ஞாயிறு தேரோட்டமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டு அந்த நடைமுறையே தற்காலத்திலும் நடைபெற்று வருகின்றது. கொக்கட்டிச்சோலைப் பதியின் திருவிழா வைப்பு முறை மேல்வருமாறு அமைகின்றது.

| | |
|---|---|
| 1 - 6 நாட்கள் | கோயில் திருவிழா |
| 7ம் நாள் | கோயில் தொண்டூழியருக்குரிய திருவிழா |
| 8ம் நாள் | சட்டி குடியார் |
| 9ம் நாள் | பெத்தாங் குடியார் |
| 10ம் நாள் | கோப்பி குடியார் |
| 11ம்நாள் | கச்சிலா குடியார் |
| 12ம் நாள் | படையாண்ட குடியார் |
| 13ம் நாள் | காலிங்கா குடியார் |
| 14ம் நாள் | உலகிப் போடி குடியார் |
| 15ம் நாள் | தேரோட்டம் |
| 16ம் நாள் | தீர்த்தோற்சவம் |

இங்கு திருவிழா புரிபவர்கள் 20 மரைக் கால் நெல் அமுதுக்காகவும், 80 மரைக்கால் நெல் திருவிழா ஊழியத்துக்காக முற்கூட்டியே

பரிபாலன சபையினரிடம் ஒப்படைத்தல் வேண்டும். இவ் நெல்லைக் கொண்டு குருக்கள், கௌடா வீட்டுக்காரர், அமுது வைப்பவர், தொண்டூழியர்க்காரர், நெல்லுக் குத்தும் பெண்கள், தொழும் பறை ஊழியர் கள், கங்காணி, பட்டிக்காரன், அன்னக் கொடி பின்னுபவர், கொடிமரம் ஏறுபவர், உள் விளக்கு, வெளிவிளக்கு எரிப்பவர், திரு நீற்றய்யர், மணிக்காரன், தவில், குழல் வாசிப்பவன், பெரிய தேர் பராமரிப்பவர், வீதி அதிகாரி, கோயில் வண்ணான், பரி வட்ட வண்ணான், மாலை கட்டுபவர், தம்பட்டம் அடிப்பவர், ஆலாத்திப் பெண், சந்திரப்பிறை, சூரியப் பிறை, முகக் களை பிடிப்பவர், கொடி, சூல விளக்கு பிடிப் போருக்கு எவ்வளவு மரைக்கால் நெல் படியாக வழங்கப்பட வேண்டும் என்ற நடைமுறையும் உண்டு. இப்படிகளோடு வண்ணக்குமாரிடை கணக்கில் 15 மரைக்கால் ஒவ்வொரு திரு விழாக்காரரும் கொடுத்து தவ வேண்டும். சாமி தூக்குவதற்காகப் பழுகாமத்தில் இருந்து வரும் வேளாளருக்கு ஒவ்வொரு திருவிழா நாளிலும் உணவுக் காக 16 கொத்து அரிசியும், காய்கறியும், கொடுக்க வேண்டும் என்ற நடைமுறைகளும் இருந்து வருகின்றது.

## 09. தேசத்துக் கோயில்

கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக் களப்பிலே தேசத்துக் கோயில் என்னும் கோட்பாட்டு வழமை காணப்படுகின்றது. இது மாதிரியான வழமை இலங்கையில் வேறு எந்த மாவட்டத்திலும் காணமுடியாது. முற்காலங்களிலே கோணேஸ்வரம் முதல் கதிர்காமம் வரையிலான ஏழு கோயில் களைத் தேசத்துக் கோயில்கள் என்று கொள்வது வழமையாகியிருந்தது. மட்டக் களப்பு தேசத்தில் உள்ள சைவர்கள் அனை வரும் யாத்திரை சென்று அவரவர்களுக் கென்று வகுக்கப்பட்ட ஊழியங்களையும் புரிந்து சமய, சமுதாய சம்பிரதாயங்களையும் அனுசரித்து வருகின்ற கோயில்களாக அக் கோயில் விளங்குகின. அதனால் தேசத்தின் பொதுக் கோயில்கள் எனக் கொள்ளப் படலாகின. மேலும் கிழக்கிலங்கையில் மிகத் தொன்மையானதும், பழங்காலத்திலிருந்தே மன்னர்களாலும், வன்னிமைகளாலும் சீர் வரிசைகள், மானியங்கள் வழங்கப்பட்டு வந்ததுமாகிய கோயில்களையும் தேசத்துக் கோயில் என்றும் வழங்கப்படும் மரபும் உள்ளன. அவை தேசத்துக் கோயில் மரபு களிலிருந்து வேறுபட்டவை. சிலர் இவை இரண்டும் ஒன்று என்று வாதாட்டம் புரிகின்றனர். ஆனால் இவ்விரு கோயில் மரபுகளில் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரம் மிகச் சிறப்பு வாய்க்கப் பெற்ற கோயிலாக விளங்குகின்றது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரக் கோயிலில் மட்டுமே இன்றும் தேச வழமை மரபுகள் பிசகாது பின்பற்றப்பட்டு வருகின்றமையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இக்கோயிலின் தேரோட்டம் முடிந்து அடுத்த நாள் திருப்படைக் களஞ்சியம் கஞ்சி முட்டி கூறுவதும் உரித் துடையோர் தங்களின் உரிமைப் பாடலை ஓதிக்காட்டி வாங்குவதும், உரித்துடையோ ரல்லாதவர் வாங்கும் பட்சத்தில் பங்கு தடுப்பதும் தேசத்தவர்களின் முன்னிலையில் இடம் பெறும் சுவாரசியமான ஒரு நிகழ் வாகும். இது பற்றிய பாடல்கள் வினாவிடை போல் அமைந்திருக்கும் அதற்கு எடுத்துக் காட்டாக அமையும் சில பாடற் பகுதி வருமாறு.

தேசமென்னும் வரிசை முட்டி வாங்கவந்தீர
உன் திறமை யென்ன
செங்கோ லோச்சுந்திசை தானெங்கே?...

என வினவப்படும் பாடலிற்கு கலிங்கன்

"பேர் பெரிய எனது முன்னோரிருந்த தேசம்
பிரம புத்திரா நதி தனக்குப் பக்கமாகும்...?"

என விடை கூறுவதாக, வன்னிபம், குருநாதர், பூபாலகோத்திரம், பூவைசியர், புன்னாலை, மண்முனை என்பவர்களும், பின்பு கண்டி, கதிரை, கந்தாளை, மாவலி, அயோத்தி நாட்டவர்களும் தங்களை நிரூபணம் செய்து வாங்குவது போல அமைந்துள்ளது. இத்தகைய சான்றொன்றை மட்டும் வைத்துக் கொண்டே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தை மட்டக்களப்பு பிரதேசம் முழுவதற்குமே வழிபாட்டிற்குரிய தேசத்துக் கோயில் என்று குறிப்பிடக்கூடியதாக உள்ளது.

## நிறைவுரை

கிழக்கிலங்கையில் வரலாற்றுப் பெருமை வாய்ந்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தின் பாரம்பரியங்கள் தேசத்து மக்களின் சமய, சமூக வாழ்வியலுடன் ஐக்கியப் பட்டவை. அவை ஏனைய பிராந்திய தேசத்து மக்களிடமிருந்து வேறுபட்டவையும் கூட. தொல்பொருட் சின்னங்களை ஆதார பூர்வமாகக் கொண்டமைந்த கோயிலாகவும் இது விளங்குகின்றது. இன்றைய காலத்தில் சில பல்கலைக்கழக மட்ட பேராசிரியர்களாலும், மாணவர்களாலும், வரலாற்று ஆவணங்களைக் கண்டறிதல், அவற்றைப் பாதுகாத்தல், அவற்றின் உண்மைத் தகவல்களை வெளியிடுதல் போன்ற தார்மீகச் செயற்பாடுகளில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு நல்ல களமாக அமைவது கொக்கட்டிச்சோலை தேவஸ்தானம் என்றால் அது மிகையாகாது. இதனைக் கொக்கட்டிச்சோலை தேவஸ்தானம் பரிபாலன சபையினரும் உணர்ந்து ஒத்தாசை நல்கும் பட்சத்தில் தேசத்துக் கோயிலின் பாரம்பரியங்கள் மென்மேலும் சிறக்கும் எனபதில் எவ்வித ஐயமுமில்லை.

## உசாவியவை


*மட்டக்களப்பு மான்மியம்*, F.X.C. நடராசா, கொழும்பு 1964, இரண்டாம் பதிப்பு மட்டக் களப்பு மாவட்டக் கலாசாரப் பேரவை, 1998.

*மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்*, வித்துவான் சா.இ. கமலநாதன், திருமதி கமலா கமலாநாதன், கொழும்பு 2005, குமரன் புத்தக இல்லம்.

*ஈழத்து இலக்கியமும் வரலாறும்*, பேராசிரியர் சி. பத்மநாதன், குமரன் புத்தக இல்லம், கொழும்பு 2004.

*குளக்கோட்டன் தரிசனம்*, செல்வி க. தங்கேஸ்வரி, அன்பு வெளியீடு, ஆரையம்பதி, மட்டக்களப்பு 1993.

*மாகோன் வரலாறு*, செல்வி க. தங்கேஸ்வரி, அன்பு வெளியீடு, ஆரையம்பதி, மட்டக்களப்பு 1995.

*தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும்*, வெல்லவூர்க் கோபால், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு, 2003.

*ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்*, நா. நவநாயகமூர்த்தி, வானதி வெளியீடு, அக்கரைப்பற்று, 2002.

*இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்*, பேராசிரியர் சி. பத்மநாதன், குமரன் புத்தக இல்லம், கொழும்பு 2002.

*மட்டக்களப்புச் சைவக் கோயில்கள்*, வீ.சீ. கந்தையா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1997.

*தேரோட்டம், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான் தோன்றீஸ்வர ஆலய புனராவர்த்தன் பிரதிஸ்டா மகா கும்பாபிஷேக சிறந்த மலர்*, 1993.

*மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு*, பேராசிரியர் சி. மௌனகுரு 2ஆம் உலக மாநாடு, மட்டக்களப்புப் பிரதேசக் கிளை, 2003.

# தெய்வத் தமிழிசை

தெய்வத்தன்மை வாய்ந்த தமிழிசை தெய்வத்தை நிகர்த்த தமிழிசை, தெய்வத் தன்மை அளிக்கும் தமிழிசை என்று பலவாறாகக் கொள்ளலாம். உலக மொழிகளில் நம் தமிழ்மொழி தெய்வத்தைக் காட்டும் மொழி. உருக்கத்தை ஊட்டும் மொழி என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. இனிமையே வடிவமாக சிறந்த இலக்கணமும் இலக்கியங்களும் நிறைந்த வளமிக்க மொழி உருக்கத்தை ஊட்டும் மொழி என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. இனிமையே வடிவமாக சிறந்த இலக்கணமும் இலக்கியங்களும் நிறைந்த வளமிக்க மொழி நம் தமிழ் மொழியே யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்றார் பதினாறு மொழி தெரிந்த மஹாகவி பாரதியார். தமிழிலே இயல்தமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என்ற மூன்றும் சிறந்து விளங்குகின்றன. இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட தொல்காப்பியமும் திருக்குறளும் சிலப்பதிகாரமும் நம் தமிழர் நாகரீகத்தின் உயர்வைப் பறைசாற்றுகின்றன. இயலுக்கும் நாடகத்திற்கும் இடையில் வரும் இசைத்தமிழ் இசைப்பவரையும் கேட்போரை யும் இசைய வைக்கிறது. அது மட்டுமல்ல பரமனுக்கு ஆளாகி பக்தியின் பாலராய் தமிழில் இசைபாடுவோரை இறைவனிடமே இசைவிக்கிறது. அதைக் கேட்பவர்களும் இசையின் மூலம் இறைவனில் ஒன்று படுகிறார்கள். இசையே இறைவனின் வடிவம் தானே. ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ள இறைவனை தெய்வத் தன்மை பொருந்திய தமிழிசையால் கட்டிப் போட்டவர்கள் நம் அடியார் பெருமக்கள்.

திருநெறிய தமிழிசையை முதலில் வழங்கியவர் மூத்த திருப்பதிகங்களை அருளிய காரைக்காலம்மை ஆகிய புனிதவதியார். அவரே நாம் என்ன கேட்க வேண்டும் என்று ஆசானாய் நின்று அருளு கிறார். பெரிய புராணத்தில் இறவாத இன்ப அன்பு வேண்டும் அம்மை,

*'பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்பு*
*உண்டேல் உன்னை என்றும் மறவாமை*
*வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து*
*பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின்*
*கீழிருக்க'*

வேண்டும். என்கிறார். இது சேக்கிழார் பிடிக்கும் படம் என்றாலும் அம்மையாரின் உள்ளக்கிடக்கை உள்ளவாறு தெரிகிறது.

மணிவாசகத்தில் 'பாட வேண்டும் நான் போற்றி' என்ற பாடலும் நாம் அனுதினமும் சொல்லி வேண்டியதைப் பெற உதவும். பாடுவதன் பயன் என்ன? நின்னையே பாடி நைந்து நைந்துருகி நெக்கு நெக்கு ஆட வேண்டும். அம்பலத்து ஆடும் நின்கழற் போது நாயினேன் கூட வேண்டும். பொய்யெலாம் வீட வேண்டும். வீடு தந்தருளப் பெற வேண்டும் என்று வரிசைப் படுத்திக் கொடுக்கிறார், மணிவாசக வள்ளல். பாட்டினால் வீட்டை அடையலாமா? என்று கேட்கலாம். நிச்சயமாக அடையலாம். விடுவது வீடு, பெறுவது பேறு தானே வீடு பேறு? எதை விட வேண்டும்? பொய் எல்லாம் பீட வேண்டும். இங்கு பொய் என்பது நிலைபேறு இல்லாத உடல், உலக நுகர்வுகள் (Temporary) ஆகியவற்றின் மீதுள்ள பற்று, பெறுவது சிவப்பேறு இடை

யீடுபடாத பேர் இன்ப நுகர்ச்சி. (சிவானந்தம்) தெய்வத் தன்மையுடைய நம் திருமுறைகளை இசையுடன் பாடும்போது உள்ளம் உருகி மெய்ம்மறந்து போகிறது. பாடலின் பொருளில் தேய்வுறும் போது எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாகிறது. இறைவனின் அளப்பரும் கருணை இசை வடிவில் நமக்குக் கிடைத்துள்ளது. பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் என்பார் நம்மை மீளா ஆளாக் கொண்ட சுந்தரர் பெருமான் மதிய வேளையில் பசியும் களைப்புமாக வருவதைத் தரிக்க மாட்டாதவனாகி நம் சிவபெருமான் திருக்குருகாவூரில் தண்ணீர்ப் பந்தல் வைத்து இவர் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தான். சுந்தரர் பெருமான் வந்ததும் பசியால் களைத்திருக்கிறாயே இந்த உணவை உண்பாயாக என்று தாயினும் சாலப் பரிந்து உபசரித்தான். உண்ட களைப்பினால் சிறிது கண் அயர்ந்தார். நம்பியாரூர் களைப்பு நீங்கி எழுந்து பார்த்தால் தண்ணீர்ப் பந்தலையும் காணோம். உபசாரம் செய்தவரையும் காணோம். சுந்தரர் பெருமான் கருணையை வியந்து நயந்து இத்தனையாமாற்றை அறிந்திலேன் என்று தெய்வத் தமிழிசையில் பாடுகிறார். தெய்வீக தமிழிசைப் பாடலைத் தானும் கேட்டு நம்மனோரும் உய்யும் பொருட்டு பெருமான் செய்த திருவிளையாடல்கள் தான் எத்தனை? எத்தனை? செங்கல்லைத் தங்கமாக்கினார்.

*'மோகம் அறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென*
*ஆகமங்கள் சொன்ன அவர்தம்மை - தோகையார்பால்*
*தூதாகப் போகவிடும் வன் தொண்டன்*
*தமிழிசையை எதற்கு ஒப்பாகச் சொல்ல முடியும்?'*

தமிழிசைப் பாடல்களைத் தினமும் கேட்க வேண்டும் என்று திருவீழிமிழலையில் அப்பர் பெருமானுக்கும் சம்பந்த மூர்த்திக்கும் தினம் ஒரு பவுண் காசு கொடுத்து உவந்தார் நம் பெருமான்.

*'இருந்து நீர்தமிழோடு இசைகேட்கும் இச்சையால்*
*காசு நித்தல் நல்கினீர்'*

என்று சுந்தரர் பாடியது நல்லதொரு அகச் சான்று. மொழிக்கு மொழி தித்திப்பாக உள்ள மூவர் சொல்லாகிய தெய்வத் தமிழிசைப் பாடல்கள் இன்றும் மூவாய் மருந்தாய் நமக்கு இம்மைக்கும் மறுமைக்கும் பயனளித்துக் கொண்டே இருக்கிறது. தீரா நோய்கள் தீர்க்கின்றன. தீந்தமிழ் தெய்வீகப் பாடல்கள் ஓதுவார்க்குப் பொன்னும் மெய்ப் பொருளும் தருபவை. போகமும் திருவும் புணர்ப்பவை.

பாலும் அமுதும் தேனுமாய் ஆனந்தம் தந்து உயிர்க்குள்ளே ஆருயிர் போகமாய் எம்பெருமான் திருவருள் வடிவில் திகழ்ந்து கொண்டிருப்பதை நமக்குக் காட்டி இன்பம் ஊட்டுபவை. தேனாய் இன்னமுதாய் தித்திக்கும் சிவபெருமான் நாம் உய்ய வேண்டி மணிவாசகரை வலிய வந்து ஆண்டான்.

நாம் தெய்வத்தமிழிசை பெற்று உய்ய மதுரை மாநகரில் குதிரை மாறியும் விண் புகழ் முடிமிசை மண் பொறை சுமந்தும், நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும் தில்லையினில் மணிவாசகர் சொல்ல தம் திருக்கரத்தால் எழுதி அழகிய திருச்சிற்றம் பலம் உடையான் என்று கைச்சாத்தும் இட்டான். பெருமானின் திருக்கருணையே தெய்வத் தமிழிசையாக வந்தது. உருகி நாம் அவனைப் பருக வந்தது. தெய்வத் தமிழிசை பெருமைகளை எத்தனையோ காலமெல்லாம் சொன்னாலும் முடிவே இராது. எனவே, அவரவருக்கு உள்ளபடி ஈசன் அருளாலே அவன் புகழாகிய தெய்வத் தமிழிசையாகிய திருமுறைகளைப் பாடி உய்வோமாக!

*எண்ணும் அடியார்கள் அண்ணல் மருதரை*
*பண்ணின்மொழி சொல்ல, விண்ணும்தமதாமே!*
*- திருஞானசம்பந்தர் தேவாரம்*

*நன்றி: திருக்குட நன்னீராட்டு விழா மலர் - 2006*
*'திருவாசகத் தேனிசை வாணி'*
சுவர்ணா சோமசுந்தரம்

# ஆலயத்தின் அமைப்பும் திருவுருவங்களும்

'அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு' என்று தத்துவ நூல்களும், சமய ஞானிகளும் உரைப்பது வழக்கம். அண்டமென்பது இந்தப் பிரபஞ்சம். பிண்டம் என்பது நமதுடல். அண்டங்கள் யாவற்றிலும் பரந்து விரிந்து வியாபித்திருக்கும் பேரருட் சக்தி நிறைந்த இறைவன் எமது உடலிலும் அவ்வாறே உறைந்திருக்கிறான்.

*'நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே'*
*'விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்'*
*'வேதங்கள் ஐயாஓங்கி ஆழ்ந்தகன்ற நண்ணியனே'*

என வரும் சிவபுராண அடிகள் சிவபெருமானின் பெருமை நுண்மைகளைப் புலப் படுத்துவன. இத்தகைய இறைவனை அண்டத்தில் வியாபித்திருக்கும் ஆண்டவனைப் பிண்டமாகிய நமது உடலிலேயே கண்டுணர்ந்து அநுபவித்து வழிபட்டு ஆனந்திப்பது ஞானிகள் செயல். இது யோக ஞான மார்க்கங்களின் பாற்பட்டது.

*'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்*
*வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.'*

என்றும் வரும் திருமுறை மலர்கள் இதனை விளக்கும்.

சிற்றறிவினராகிய எம் போன்றவர் களுக்கு இந்த யோக ஞான மார்க்கங்கள் கைவருதல் கடினமென்பதால் சரியை, கிரியை என்னும் முதற்படிகளை அமைத்தனர் சான்றோர். சரியைத் தொண்டுகளையும் கிரியை வழிபாடுகளையும் நிகழ்த்தி இறைவனை அடையும் இந்த மார்க்கங் களுக்குச் சில சாதனங்களும் அவசிய மாகின்றன.

''இன்ன வழியால் இன்ன இடத்திற்குப் போகலாம்'' என்று பாதையைச் சுட்டி நிற்றல் மட்டுமன்றி இன்ன வாகனத்தில் ஏறி இப்படிப் போக வேண்டும் என்று வழிமுறை களையும் சொல்லித் தருகிறது சைவசமயம்.

முன்பொருபோதும் கண்டறியாத பொருள்களைப் படங்கள் வரைந்து அதன் மூலம் விளங்கச் செய்வது போலவும், செயல்முறைப் பரிசோதனைகள் மூலம் சில முடிவுகளைக் கண்டறிவது போலவும், நாம் ஞானக்கண்ணால் கண்டறிய வேண்டிய இறைவனுக்குச் சில உருவப் பிரதிமைகளை நமது ஊனக் கண்களுக்குத் தெரியும்படி அமைத்து அத்திருவுருவங்களை வைத்துச் சில கிரியைகளைச் செய்கிறோம்.

எல்லா இடங்களிலும் எல்லாச் செயல்களையும் செய்வது இயலாத காரியம். அவ்வாறு செய்யின் உரியவாறு சித்திகள் கிடைப்பதும் அபூர்வம். விஞ்ஞானப் பரி சோதனைகள் அதற்கென அமைந்த ஆய்வு கூடங்களிலேயே நிகழ்த்தப்பட முடியும். இது போலவே, வழிபாடுகள் கிரியைகளை முறைப்படி நிகழ்த்த ஆலயங்கள் அவசிய மாகின்றன.

பசுவின் உடலிலுள்ள பாலை அதன் மடியிலிருந்து மட்டுமே பெறுதல் முடியும். உலகெங்கணும் வியாபித்திருக்கும் ஆண்டவனை வழிபட்டு அவனருள் பெற ஆலயமும்

இவ்வாறே அவசியமாகிறது. அது மாத்திரமல்ல! பசுவின் மடியில் கைவைத்த மாத்திரத்தில் பால் சுரப்பதில்லை. அதன் கன்றைச் சிறிது நேரம் ஊட்டும்படி விட்டுப் பின்னர் நாம் முயற்சியுடன் கறந்தெடுத்தல் போல, உரிய காலங்களில் உரிய முறைப்படி கிரியைகளை நிகழ்த்தி முயற்சியுடன் வேண்டி நின்றால் இறைவன் திருவருள் தானே சுரக்கும்.

பாலிலே மறைந்து தோன்றும் நெய்யைப் பிரித்தெடுப்பதற்கும், விறகிலே மறைந்து தோன்றும் தீயினை வெளிப்படுத்தவும் நாம் எவ்வளவு முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. இதேயளவு முயற்சியை இறையருள் நாட்டத்திலும் வைத்தால் நாம் வெற்றி பெறலாம்.

*'விறகிற் றீயினன் பாலில் படுநெய்போல்*
*மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்*
*உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்*
*முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே'*

என்று இதையே விளக்குகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருவுருவங்களினதும், ஆலயங்களினதும் அவசியம் பற்றிச் சிறிது நோக்கினோம். இவை எப்படி எப்படி அமைய வேண்டும். எந்தெந்த அளவுகளில் அமைக்கப்பட வேண்டும் என்று பல நியதிகளை - விதிமுறைகளைச் சமய நூல்கள் எடுத்துரைக்கின்றன. ஆலயங்களின் அமைப்பு மட்டுமல்லாமல் ஒவ்வொரு விதமான கிரியைகளும் நடைபெற வேண்டிய மண்டபங்கள், அவற்றின் அமைப்பு முறைகள், அளவுகள், அங்கு இருக்க வேண்டிய பொருள்கள் இவையெல்லாம் ஆகமங்களிலும் அவற்றை முதல் நூல்களாகக் கொண்டெழுந்த சிற்பசாஸ்திரம் முதலிய நூல்களிலும் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

ஆலயமானது நமது உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுவது கவனிக்கத் தக்கது. ஆலயம், அதன் கோபுரம், தேர் என்பவை மனித சரீரத்தையும், இப் பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையில் அமைக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலயமும் அமைகிறது. மூலஸ்தானம் அல்லது கருவறை சிரசினைக் குறிக்கும். அர்த்த மண்டபம் கழுத்தினையும் மஹாமண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்த மண்டபங்கள் கால்களையும், ராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

அந்த மனிதன் அப்படியே இருந்தபடியே முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தால் முள்ளந்தண்டு அமையும் வகையைக் கொடித்தம்பம் காட்டுகிறது. இக் கொடித்தம்பத்தின் அடியில் இருக்கும் சிறிய விநாயகர் எமது மூலாதாரத்தில் அரூப சொரூபியாயிருக்கும் விநாயகரைக் குறிக்கிறது. மூலாதார கணபதி என இவர் அழைக்கப்படுகிறார்.

யோக மார்க்கத்திலே ஆறாதார ஸ்தானங்கள் என மூலாதாரம், சிவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஜ்ஞை என்பன குறிப்பிடப்படுகின்றன. முள்ளந்தண்டெலும்பின் அடிப்பாகம் குண்டலினி சக்தியின் (மனிதனில் மறைந்திருக்கும் அளப்பெரும் தெய்வீக சக்தி) இருப்பிடம். இதற்குச் சற்று மேலாகக் கணபதியின் இருப்பிடமான மூலாதாரம் உள்ளது. இது நாலிதழ்க்கமல வடிவுடையது.

இதற்கு மேல் லிங்கத்தின் அடிப்பாகத்திற்கு நேரே ஸ்வாதிஷ்டானம் என்னும் ஆறிதழ்க் கமலம் உள்ளது. இது பிரம்மாவின் ஸ்தானம். நாபிக்கு நேரே உள்ள பத்திதழ்க் கமலம் மணிபூரகமாகும். இது விஷ்ணுவின் இருப்பிடமாகும். இருதயத்திற்கு நேரே உள்ள பன்னிரண்டிதழ்க் கமலம் அநாகதம். இது ருத்திரனுக்குரியது. தொண்டைக் குழிக்கு நேரே பதினாறிதழ்க் கமலமாக அமைந்தது விசுத்தி. இது மகேஸ்வரனின் இருப்பிடம். புருவ மத்திக்கு நேரே உள்ள இரண்டிதழ்க் கமலமானது ஆஜ்ஞை எனப்படும் சதாசிவனது இருப்பிடமாகும்.

இந்த ஆறு ஆதாரங்களுக்கு மேல் சிரசின் உச்சியிலே அமைந்த ஆயிரமிதழ்க் கமலமான சஹஸ்ராரம் என்பது சுத்த சிவத்தின் இருப்பிடமான துவாதசாந்தஸ்தான அடித்தளமாகும்.

இவை ஆலயத்தின் அமைப்பில் முறையே, கொடித்தம்பத்தடி, பலிபீடம், தரிசனமண்டபம், மஹாமண்டபம், அர்த்த மண்டபம், கருப்பக்கிருகம் என்பனவாக அமைகின்றன. சஹஸ்ராரத்தை நினை வூட்டவே கர்ப்பக்கிருகத்தில் கமலவிளக்கு அமைக்கின்றனர்.

ஆலயத்தின் கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகிறது. அடுக்கடுக்காய் அமைந்த தளங்கள் பல்வேறுபட்ட உலகங் களையும், உலக வாழ்க்கையின் பலவித அநுபவங்களையும் குறிப்பன. இறைவனின் பலவிதமான திருவிளையாடல்கள் மற்றும் சாதாரண உலகியல் நடைமுறைகள் என்பன கோபுரத்தில் அமையும் சிற்பங்களால் குறிக்கப்படுகின்றன.

கீழே அகன்றிருக்கும் கோபுரம் மேலே ஒடுங்கிச் சென்று கலசத்திலே நிறைவுறும், மனஒருமைப்பாடும், பரம்பொருள் ஒன்றையே பற்றி நிற்கும் மனத்திண்மையும் மேலான எண்ணங்களில் ஆழ்ந்து நிற்றலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியம் என்பதைக் கோபுரம் விளக்குகிறது.

தூல லிங்கம் என்று கூறப்படும் இக்கோபுரமானது சூக்குமலிங்கம் என அழைக்கப்படும் மூலமூர்த்தியின் வெளிப் படையான குறியீடாகவும், (தூலம் - வெளிப் படையானது, சூக்குமம் - மறைபொருள்) வெகு தூரத்திலுள்ளவர்களுக்குக் கூட ஆலயத்தின் இருப்பிடத்துக்கு வழிகாட்டு வதாகவும், காணுந்தோறும் இறையுணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது.

ஆலயங்களிலுள்ள கண்டாமணி எனப்படும் அசையா மணியும் இவ்வாறே தொலைவிலுள்ளவர்களுக்கும், பல்வேறு கடமைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உரிய வேளைகளில் இறை நினைவையூட்டிக் கோயிலின் இருப்பிடத்தைக் காட்டி நிற்பதோடு மங்கல ஓசையை வெளிப் படுத்துவதாகவும் இருக்கிறது.

மேலும், இறைவன் நாத தத்துவமாகவும் இருக்கிறான் என்பதனால் ஆலயங்களில் பல்வேறு விதமான நாதங்களை வழிபாட்டின் போது உருவாக்குகிறோம். மங்கல வாத்தியங்களை ஒலிப்பதன் மூலம் இவை உருவாக்கப்படுகின்றன.

'ஓசை ஒலிஎலாம் ஆனாய் நீயே' என்று திருமுறை கூறுகிறது. ஒலிகளிலெல்லாம் நிறைந்து விளங்குபவனாகவும், ஒலிகளை யெல்லாம் உருவாக்குபவனாகவும் விளங்கு பவன் பரமேஸ்வரனல்லவா? நடராஜ தாண்டவத்தின் போது அவரது உடுக்கி லிருந்து பிறந்த ஒலியிலிருந்தே இசையும் மொழியும் பிறந்தன.

மணியோசைக்குத் தேவர்களை அழைக்கும் சக்தியும், தீய சக்திகளை அகற்றும் சக்தியும் இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதனாற்றான் எந்தக் கிரியை ஆரம்பிக்கும் போதும் பூஜையில் பயன் படுத்தப்படும் மணிக்குப் பூஜை செய்து மந்திர சகிதமாக அதனை ஒலிக்கச் செய்கின்றார்கள்.

ஆலயத்தின் அமைப்பு வெளியே அகன்று பெரிய மண்டபங்கள் அமைந்து உள்ளே போகப் போகச் சிறுத்து ஒடுங்கி மூலஸ்தானத்திற் குவிகிறது. மனம் குவிந்து ஒருமைப்பாட்டுடன் வழிபாடியற்றிப் பரம்பொருளையடையலாம் என்பதையே இது விளக்குகிறது.

மூலஸ்தானம் எனப்படும் கருவறை யானது வாயிற்புறம் தவிர்ந்த ஏனைய மூன்று புறமும் மூடப்பெற்றதாகவும், இருள் சூழ்ந்ததாகவும் இருக்கும். வாயிலில் திரை இடப்பட்டிருக்கும். சிவாசாரியார் திரையை நீக்கித் தீபத்தை ஏற்றிக் காட்டும் போது தான் இறைவன் திருவுருவம் தெற்றெனத் தெரிகிறது.

ஆன்ம கோடிகளின் அறிவை மறைத்து உணர்வை மழுங்கடித்து அவர்களை மூடி நிற்கும் ஆணவ இருளை நீக்கி நல்லறிவுச் சுடர் கொளுத்தி ஞானதீக்ஷை வழங்கி நல்லாசான் வந்து வழிகாட்டும் போது திருவருட் சக்தியின் துணையால் சிவ தரிசனம் கிட்டும் என்ற சைவசித்தாந்தக் கருத்தினது தத்துவ விளக்கமாக இவை அமைவது கவனிக்கத்தக்கது.

ஸ்தம்ப மண்டபத்திலே கொடித் தம்பத்திற்கருகிலே பத்ரலிங்கம் என்று கூறப் படும் பலிபீடமும் அதையடுத்து நந்தியும் அமைந்திருக்கக் காணலாம். இவையும் பதி, பசு, பாசம் என்கிற (இறைவன், ஆன்மா, ஆணவாதி மலங்கள்) முப்பொருளுண்மை கூறி நிற்பவையே.

நந்தியானது பலிபீடத்தைப் பாராது சிவனை நோக்கியவாறு (மூலஸ்தானத்தைப் பார்த்தபடி) அமைகிறது. பலிபீடம் மலநீ க்கத்திற்கு அறிகுறி. நந்தி ஆன்மா. ஆன்மா, தனது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் பலியிட்டு அவற்றி னின்றும் நீங்கிப் பதியாகிய பரம்பொருளை நாட வேண்டும் என்பதையே இது குறிக்கிறது.

கொடிமரமானது பஞ்சகிருத்தியங்களை விளக்கும் மஹோற்சவ காரியத்திற்குப் பயன்படும். இதன் விளக்கம் மஹோற்சவம் என்ற அத்தியாயத்தில் தரப்படுகின்றது.

மூலஸ்தானத்திலே பிரதான தெய்வம் வீற்றிருக்க தெற்கு வாசல் நோக்கி சக்தி அல்லது எழுந்தருளி மூர்த்தம் முதலிய வற்றிற்கும் சுற்றுப் பிரகாரத்திலே உரிய இடங்களிலே ஏனைய பரிவார தெய்வங் களுக்குமாக சந்நிதானங்கள் அமைக்கப் பட்டிருக்கும். ஆலயங்கள் பொதுவாகக் கிழக்கு நோக்கி அமைவதே முறை. ஆனால் இடம் பொருள் ஏவல்களுக்கேற்றபடி மிகச்சில இடங்களில் வடக்கு மேற்கு நோக்கியும் கோயில்கள் அமைவதுண்டு. ஆனால் தெற்கு நோக்கி எந்தவொரு ஆலயமும் அமைவதற்கு விதி இல்லை. எனினும் சில இடங்களில் தனியான நடேசர் கோயில்கள் தெற்கு நோக்கி உள்ளன.

பொதுவாகச் சிவாலயங்களில் தென் மேற்கு மூலையில் கிழக்கு நோக்கிப் பிள்ளையாரும், வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கி சுப்பிரமணியரும், ஈசானத் தில் தெற்கு நோக்கி வசந்த மண்டபமும், மேற்கு நோக்கி யாகசாலையும், அருகில் மேற்கு நோக்கி பைரவரும், அதையடுத்து

மணிக்கோபுரமும் அமைவது மரபு. மஹா மண்டபத்தில் தெற்கு முகமாக அம்பிகை வீற்றிருப்பார். தரிசன மண்டபத்தில் நடராஜர் மற்றும் எழுந்தருளிகள் வைக்கும் வழக்கம் சில இடங்களில் உண்டு. நந்தி, பலிபீடம் இவற்றிற்கு நேர் வடக்கே நவக்கிரகங்கள் அமையும்.

நவக்கிரக மண்டபத்திலே மத்தியில் கிழக்கு நோக்கிச் சூரியனும், தென்கிழக்கில் மேற்கு நோக்கிச் சந்திரனும், தெற்கிலே தெற்கு நோக்கிச் செவ்வாயும், வடகிழக்கில் கிழக்கு நோக்கிப் புதனும், வடக்கிலே வடக்கு நோக்கிக் குருவும், கிழக்கிலே கிழக்கு நோக்கிச் சுக்கிரனும், மேற்கிலே மேற்கு நோக்கிச் சனீஸ்வரனும், தென் மேற்கில் தெற்கு நோக்கி ராகுவும், வடமேற்கில் தெற்கு நோக்கிக் கேதுவும் காட்சியளிப்பர்.

இவ்வாறு அமைக்கப்படுவது வைதிக முறை என்று சொல்வர். அநேகமான கோயில்களிலே இந்த முறையே கைக் கொள்ளப்படுகிறது. ஆகம முறைப்படி அமைந்த கோயில்களில் இது வைதிக முறைப்படி அமைவது ஏன் என்பது அறிஞர் களின் ஆராய்ச்சிக்குரியது.

சூரியன் நடுவிலிருக்க, சுபக்கிரகங்கள் நான்கும் நான்கு திக்குகளிலும், ஏனைய நான்கு கிரகங்களும் நான்கு விதிக்கு களிலும் (மூலைகள்) அமைப்பது ஆகம முறை என்பர்.

சனீஸ்வரனைச் தனிச் சந்நிதானத்திலே அமைக்கும்போது ஈசானத்தையடுத்து பைரவருக்கருகில் மேற்கு முகமாக அல்லது வடமேற்கு மூலையில் தெற்கு முகமாக அமைத்தல் மரபு. கோபுர வாசலையடுத்து இரு புறத்திலும் மேற்கு முகமாகச் சூரிய சந்திரர்களுக்கும் தனிக்கோயில்கள் அமைவ துண்டு.

ஆலய அமைப்பு, சுற்றுமதில்கள், வீதிகள், பரிவார தெய்வங்கள் இவை யாவற்றையும் நோக்கும்போது நமக்கு ஒரு ராஜசபை நினைவுக்கு வருவது இயல்பு. வீதி உலாவருதல், குடை, தீவட்டி உப சாரங்கள் ஆகிய இவையெல்லாம் ராஜ மரியாதைக்குச் சமமானவையே!

முற்காலத்தில் அரசனைக் கடவுளாக மதித்தமையாலும், அரசனே கண்கண்ட தெய்வமாக இருந்தமையாலும் இத்தகைய ராஜோபசாரங்கள் அரசனுக்கும், கடவுளுக் கும் சமமாக இருந்தன.

பிரபஞ்ச இயக்கம் பரம்பொருளின் பஞ்சகிருத்தியங்களின் அடிப்படையில் நடப்பது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற இந்த ஐந்தொழில் களையும் பரம்பொருளாகிய சிவபெருமான் தாமே புரிவாரெனினும், தமது சக்தியின் துணைகொண்டு பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகியவர்களை அதிட்டித்து நின்று இத்தொழில்களைப் புரிவதாகக் கருதுதல் சித்தாந்த மரபு. ஒரு இராச்சியத்தை நிர்வகிக்கும் அரசன் பல மந்திரிகள், சேவகர்கள், உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் ஆகியோரைக் கொண்டிருத்தல் போலப் பரமசிவனும் தமது பரிவார தெய்வங்கள் மூலமாகப் பிரபஞ்சத்தை இயக்குதல் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றே.

ஆயின் சற்று நிதானமாகச் சிந்திப்பின், இவ்வியக்கங்களுக்கெல்லாம் மூலகாரணமா யிருக்கின்ற அந்த ஒருவரே வேறு வேறு பெயர்களையும் தோற்றங்களையும் கொள்கிறார் என்பது விளங்கும். விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் ஆகிய நால்வரும் சிவபெருமானின் திருக்குமாரர்கள்

என்று கூறப்படும். அதே நேரத்தில் இவர்கள் பரம சிவனிடமிருந்து வேறல்லாதவர்கள் என்பதும் பல புராணங்களிலிருந்து புலப் படுகின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு தேவையை முன்னிட்டு ஒவ்வொரு திருவுருவத்தினைப் பரமேஸ் வரன் மேற்கொண்டிருக்கிறார். அத்தகைய வடிவங்களும் ஆலயங்களிலே பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்படுவதுண்டு.

ஆலயத்தின் கருவறைச் சுவர்களிலும், அர்த்த மண்டபச் சுவர்களிலும் வெளிப்புறங் களில் மாடங்கள் செய்யப் பெற்று (இவை கோஷ்ட பஞ்சரங்கள் எனப்படும்) அவற்றிலும் திருவுருவங்கள் சில பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. இவற்றில் தெற்கே உள்ள மாடங்களில் தட்ணாமூர்த்தி, நிருத்த கணபதி ஆகியோரும், மேற்கே உள்ளதில் லிங்கோற்பவரும், வடக்கே உள்ள மாடங் களில் பிரம்மா துர்க்கை ஆகியோரும் அமைவது வழக்கம்.

கோயில் அதன் வசதிக்கேற்பவும், சூழலுக்கேற்பவும் ஒரு வீதியுடையதாக அல்லது பல வீதிகளை உடையதாகவும் பல்வேறு மண்டபங்களை உடையதாகவும் அமையும். சாதாரணமாக கர்ப்பக்கிருகம் (மூலஸ்தானம்), அர்த்த மண்டபம், மஹா மண்டபம், தரிசன மண்டபம், (நிருத்த மண்டபம்), வசந்த மண்டபம், (தேவசபை), யாகசாலை, பாகசாலை (மடைப்பள்ளி), களஞ்சியம், வாகனசாலை என்பனவும், பரிவார தேவர்களின் சந்நிதிகளும் பெரும் பாலும் எல்லாக் கோயில்களிலும் இருக்கின்றன. வசதியுள்ள பெரிய கோயில் களில் வாத்திய மண்டபம், புராண மண்டபம், தீக்ஷா மண்டபம், புஷ்ப மண்டபம் எனப் பல மண்டபங்கள் அமைவதுண்டு.

மூலஸ்தானத்தின் மேல் பண்டிகை அல்லது ஸ்தூபி எனப்படும் பகுதி உண்டு. ஸ்தூபி இல்லாத கோயில்களை மடாலயங்கள் என்று கூறுவர். ஸ்தூபி, ராஜகோபுரம், தூண்கள், விதானங்கள் முதலியவற்றிலும், விக்கிரகங்கள் எனப்படும் இறைவன் திருவுருவங்களிலும் இந்து நாகரிகத்தின் சிறப்பைக் காணலாம். இவற்றில் சிற்பக்கலை நுணுக்கமும் ஓவியக்கலை மாட்சியும் ஒளிர்கின்றன. இவை இந்து மதத்தின் பக்தி நெறியை மட்டுமன்றிக் கலை கலாசாரங் களின் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக் குள்ள சிறப்பினையும் எடுத்துக்காட்டு வனவாக அமைகின்றன.

பிரகாரங்கள் எனப் பெயர் பெறும் வீதிகள் இறைவனின் திருவுருவங்கள் அலங் கரிக்கப்பட்டு உலா வருவதற்கும், பக்தர்கள் வீதிவலம் வந்து வழிபாடியற்றுதற்கும் உதவுகின்றன. வீதிவலம் வருதல், அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் எனக் கூறப்படும் முறைகளில் வீழ்ந்து வணங்குதல், சிரசில் குட்டி வணங்குதல், தோப்புக்கரணம் போடுதல், அங்கப்பிரதட்சணம் செய்தல் ஆகியன நமது வழிபாட்டு முறைகளிற் சிலவாகும்.

இவற்றை ஒழுங்கான முறையிற் கடைப் பிடித்து வழிபடும்போது இவை மனத்தை ஒரு நிலைப்படுத்தி இறைவனை நாடிச் செல்ல உதவுவதோடு நல்ல உடற்பயிற்சி களாகவும் அமைந்து உடல்நலத்திற்கும் உதவுகின்றன. உடலும் மனமும் ஒத்துழைத்து இறையருளைப் பெறத் துணை புரிகின்றன.

இவை மட்டுமல்லாமல், இங்கு நடை பெறுகின்ற கிரியைகளுங்கூட நமது மன வளர்ச்சியில் படிப்படியான முதிர்ச்சியை ஏற்படுத்தி ஆன்மவிடுதலைக்கு நம்மை

அழைத்துப் போகின்றன என்பது நன்கு சிந்தித்தால் உணரப்படும்.

இனி, திருவுருவங்கள் பற்றிச் சிறிது சிந்திப்போம். உருவ வழிபாட்டின் அவசியம் பற்றியும், சிவலிங்கத் திருவுருவம் பற்றிய கருத்து விளக்கமும் வேறோர் இடத்தில் உரைக்கப்படுகின்றது. சிவலிங்கம் இறைவனின் குறியீடாக அமைவது, உருவமல்லாதது, அருவமும் அல்லாதது. எனவே அருவுருவத் திருமேனி என இதனைக் கூறுவர். அருவத் திருமேனி வழிபாடு ஞான மார்க்கத்திற்குரியது. எம்போன்ற சிற்றறிவினர்க்குரிய சரியை, கிரியை வழிகளுக்கு உதவும் வகையில் உருவத் திருமேனிகள் பல உள்ளன. அவற்றையே ஆலயங்களில் வைத்து வழிபடுகிறோம்.

சிவபெருமானது சிறந்த மூர்த்தங்களுள் ஒன்று நடராஜ வடிவம். இது ஐந்தொழிலைக் குறிக்கும் ஆனந்த தாண்டவ வடிவமாகும். இடது பாதம் தூக்கி வலது பாதம் ஊன்றி ஆடும் இந்த நடனத்தில்,

**'தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்**
**ஊன்றும் மலர்ப்பதத்தே உற்ற திரோதம் முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு'**

என்ற திருப்பாடலுக்கமைய உடுக்கிலிருந்து பிறக்கும் நாதம் படைத்தலையும், அபயகரம் காத்தலையும், அக்கினி ஏந்திய கரம் அழித்தலையும், முயலகன் மேல் ஊன்றிய பாதம் மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கின்றன. இந்த ஆனந்த தாண்டவத்தில் சிவகாமசுந்தரியின் உருவம் இடம்பெறல் முக்கியம். நடராஜ தாண்டவத்தின் பல்வேறு வகையான மூர்த்திகள் அமைக்கப்படு கின்றன. கால் மாறி ஆடிய மூர்த்தி, ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி என்று பலவாகும். இவற்றை விட சோமாஸ்கந்தர் (நடுவில் பாலமுருகனும், இருபுறமும் சிவனும் உமையுமாக அமர்ந்த திருக்கோலம்), சந்திரசேகரர் (பிறை சூடிய பெருமானின் நின்ற திருக்கோலம் - உமையுடன் கூடியும் தனியாகவும் இருவகையிலமையும்), பிக்ஷாடனர் (பிக்ஷை ஏற்கும் திருக்கோலம்), தட்ணாமூர்த்தி (தெற்கு முகமாக வடவால மரத்தின் கீழ் அமர்ந்து சநகர், சநாதனர், சநந்தனர், சநற்குமாரர் ஆகிய நான்கு சீடர்களுக்கும் ஞானநிலையை விளக்கும் கோலம்) என்பன சிவனின் மூர்த்தி பேதங்களுட் சிலவாகும். சிவாலயங்களில் இம் மூர்த்திகள் பரிவார தெய்வங்களாக அமையும். மூலஸ்தானத்தில் சிவலிங்கமே அமைதல் வழக்கம்.

பரம்பொருளின் திருவருட் சக்தியானது பெண் வடிவமாக - தாய்மைத் திருவுருவாக அம்பிகை என அன்போடு வழிபடப்படு கின்றது. சதாசிவப் பரப்பிரமத்தின் சக்தியாக பரம மங்கள ஸ்வரூபியாக உருவகப் படுத்தப்படும் தேவி மனோன்மணியின் தோற்றம் அபய வரத ஹஸ்தங்களுடனும், ஜப மாலை தாமரைகளுடனும் நின்ற கோலத்தில் அமைக்கப்படுகிறது. பாசம், அங்குசம், வரதம், அபயம் என்பவற்றுடன் புவனேஸ்வரியாகவும், சதாசிவ மூர்த்தியாகிய பரமசிவனுடன் இணைந்து காணப் படும் வேளையில் கௌரி என்ற பெயருடன் வலக்கரத்தில் நீலோற்பலம் ஏந்தி, இடக்கரம் தொங்கவிட்ட தோற்றத்துடனும் அமைக்கப் படுகிறது.

மாராசுரனை அழித்ததனால், மஹாமாரி என்ற மூர்த்தம் உருவாகியது. முக்கண்ணும், நான்கு கரமும் (கபாலம், கத்தி, பாசம், உடுக்கு). இடக்கால் மடித்து வலக்கால் தொங்கவிட்டு அமர்ந்த தோற்றமும், தலையைச் சுற்றி ஒளிரும் அக்கினிப் பிழம்பும் மஹாமாரியின் திருவுருவமாகும். ஐந்து தலை நாகமொன்று சிரசின் மேல்

படமெடுத்திருக்க இவள் தோற்றத்தை அமைப்பதுமுண்டு. இவள் நோய்களுக்கு அதிபதி.

மகிஷாசுரமர்த்தனியாகிய துர்க்கை எருமைத் தலைமேல் நிற்பவளாகவும், சங்கு, சக்கரம், சூலம் என்பன தரித்தவளாக வும் காணப்படுவாள். எட்டுக் கரங்களுடனும், பத்துக் கரங்களுடனும், பதினெட்டுக் கரங்களுடனும் அமைக்கப்படும் வேறு வகையான துர்க்கையின் திருவுருவங்களும் உள்ளன.

காளியின் திருவுருவம் பெரும்பாலும் நின்ற உருவிலும், மிகச் சில இடங்களில் இருந்த உருவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இது மஹாமாரியின் உருவத்தையொத்த தெனினும் அக்கிளி, ஜடை, பாம்பு என்பன இருப்பதில்லை. கத்திக்குப் பதிலாகச் சூலம் இருக்கும். (சில இடங்களில் மஹாமாரியின் உருவத்திலும் சூலம் இருப்பதைக் காணலாம்.)

விக்கினேஸ்வரப் பெருமானின் பருத்த தொந்தியும், தும்பிக்கையும், சுளகுக் காதும் கொண்ட உருவம் யாரும் அறிந்ததே. 'ஓம்' என்ற பிரணவ வடிவமாக அமைந்தது விநாயகரின் முகம். நான்கு கரங்களில் பாசம், அங்குசம், ஒடித்த கொம்பு, மோதகம் என்பவற்றை வைத்திருப்பார். துதிக்கை இடதுபுறம் திரும்பியிருக்கும். சில இடங்களில் மாறியிருப்பதும் உண்டு. இவர் வலம்புரி விநாயகர் என அழைக்கப்படுவர்.

எல்லா உலகும் இவருள் அடக்கம் என்பதனை இவரது பருத்த தொந்தியும், எல்லா அறிவும், சகலகலாவல்லமையும் உடையவர் என்பதைப் பெரிய செவிகளும், மலநீக்கத்தை முறித்த தந்தமும், ஞானம் வழங்குவதை மோதகமும் காட்டுகின்றன. பேருருவமுடையவ ரெனினும் சின்னஞ் சிறு எலியையே வாகனமாகக் கொண்ட தன்மை இவர் பெருமைக்கும் நுண்மைக்கும் அப்பாற்பட்டவர் என்பதையும் காட்டும்.

விநாயகர் இருந்த கோலத்திலும், நின்ற கோலத்திலும் அமைக்கும் வழக்கம் உள்ளது. சிவனுக்குச் சமமானவர் என்பதால் ஐந்து முகங்களுடன் பஞ்சமுக விநாயகர் என்ற உருவமும் அமைக்கப்படுகிறது. பதினாறு வகையான கணபதி உருவங்கள், மற்றும் 32 வகையான திருவுருவங்கள் என்பன நூல்களிற் சொல்லப்பட்டுள்ளன.

விநாயகரை வல்லபாசக்தியுடன் கூடிய வராக வழிபடும் முறை கிரியா மார்க்கத் திலுண்டு. சித்திபுத்தி விநாயகர் என்று இரண்டு சக்திகளுடன் புராணங்கள் சில விநாயகரைச் சித்திரிக்கின்றன. எனினும் நமது ஆலயங்களில் விநாயகரைத் தனியே அமைப்பதே மரபு. இவரைப் பிரம்மசாரி என்றும் கூறுவர்.

சைவசமய தத்துவார்த்த உண்மைகளை விளங்கிக் கொள்ளாதவர்களுக்கு இவை முரண்பாடுகளாகவும், மயக்கம் தருவன வாகவும் இருக்கும். ஆனால் எமது சமயத்தில் திருவுருவங்கள், கிரியைகள், புராணங்கள் என்பன வெளிப்படையான கருத்துக்களையோ பௌதீக ரீதியான விளக்கங்களையோ கொண்டவையல்ல! உள்ளார்ந்த தத்துவ உண்மைகளின் படிமங்களே இவை என்ற பேருண்மையைத் தெரிந்து உணர வேண்டும்.

விநாயகப் பெருமானின் வல்லமை என்ற சக்தியே 'வல்லபா சக்தி'என்ற ஒரு மனைவியாகவும், வெற்றி, அறிவு என்பன சித்தி, புத்தி என்னும் இரு மனைவியராகவும் உருவகிக்கப்படுகின்றன. முருகப் பெரு மானுக்கும் இப்படியே வள்ளி தெய்வயானை இருவரும் இச்சை, கிரியை (செயல்)

ஆகியவற்றின் உருவகங்களாகவே அமைகின்றனர்.

நாடகத்திற்காக ஒருவன் பல வேடங்கள் போட்டாலும் அவன் உண்மையில் அந்தப் பாத்திரங்களாவதில்லை. அவன் அவனாகவே இருக்கிறான். ஒரு தனிமனிதன் தனது தந்தைக்கு அடிபணியும் மைந்தனாகவும், தனது மைந்தனுக்குக் கட்டுப்பாடு மிக்க தந்தையாகவும், மனைவிக்கு இனிய கணவனாகவும் காட்சி தருகின்றான்.

உலகமெங்கும் வியாபித்திருக்கும் நீரானது வானத்தில் முகிலாகவும், புவி நோக்கி வரும்போது மழையாகவும், பாய்ந்தோடும் போது நதியாகவும், தேங்கி நிற்கும் போது குளமாகவும் காணப்படுகிறது.

இவையெல்லாம் இந்து நாகரீகத்தின் பலதெய்வ வழிபாட்டு முறைக்கும், திரு வுருவங்களிலே காணும் முரண்பாடுகளுக்கும் விளக்கமளிக்கும் நல்ல உதாரணங்களாகும்.

முருகப் பெருமானை அவரது ஞான சக்தியாகிய வேல் வடிவமாக வைத்து வழிபடும் மரபு பல இடங்களிலும் உண்டு. இது ஆகம விதிகளுக்கு முரண்பாடான தெனினும் இன்று பல ஆலயங்களில் மூலமூர்த்தியாக மூலஸ்தானத்தில் வேல் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது.

சக்திகள் இன்றி இளமுருகனாக பாலசுப்பிரமணியர் (இரு கைகளுடன்), வள்ளி தெய்வயானையுடன் கூடிய முத்துக்குமாரசுவாமி (நான்கு கரங்களில் வரதம், அபயம், சக்தியாயுதம், குலிசாயுதம் இவற்றுடன் வேலாயுதம் கொண்டது.) ஆறு முகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு வள்ளி, தெய்வயானையுடன் கூடிய ஷண்முகப்பெருமான் ஆகியன முருகனின் பல்வேறுபட்ட மூர்த்தி பேதங்களாகும். ஆறு முகங்களும் ஆறு கைகளுமுடைய கார்த்தி கேய மூர்த்தியும் மிகச்சில இடங்களிலுண்டு.

முருகனுக்கு வலப்புறத்தில் வள்ளியும், இடப்புறத்தில் தெய்வயானையும், நிற்க முருகனது உருவம் அமையும். தேவியர் இருவரும் முருகனது பக்கத்திலுள்ள கரம் தாமரை மலர் கொண்டதாகவும், வெளிப் புறத்திலுள்ள கரம் தொங்க விட்டதாகவும் அமையக் காட்சியளிப்பர்.

இவற்றை விடத் துறவிக் கோலத்தில் பழனியாண்டவர் திருவுருவமும் செய்யப் படுகிறது. மாங்கனிக்காக விநாயகரும் முருகனும் போட்டியிட்ட தத்துவார்த்தமுள்ள புராணக் கதையை நினைவூட்டும் உருவம் இது.

முருகப் பெருமானுக்கு வாகனம் மயில். அவரது கொடி சேவல். இவை முறையே பிந்துதத்துவம், நாததத்துவம் ஆகியவற்றைக் குறிக்கின்றன.

நாய் வாகனத்துடன் நிர்வாண கோலத்தில் பயங்கரமாகக் காட்சி தருபவர் பைரவர். இவரை ஷேத்திர பாலகர் எனவும் அழைப்பர். கோவிலையும் கிராமத்தையும் பாதுகாக்கும் காவற்றெய்வம் இவரே. இவரைச் சூலவடிவத்திலும் வழிபடுவதுண்டு.

இவர்களைத் தவிர நவக்கிரகங்கள், சூரிய சந்திரர்கள், அறுபத்து மூவர் நாயன் மார்கள், சண்டேஸ்வரர் ஆகியோருக்கும் தனித்தனி சந்நிதானங்கள் அமையும். சண்டேஸ்வரர் கூப்பிய கரத்துடன் காணப்படுவார். விநாயகர் கோவிலில் இவர் கும்போதர சண்டேஸ்வரர் எனவும், சிவன் கோயில்களில் த்வனி சண்டேஸ்வரர் எனவும், முருகன் கோவிலில் சுமித்திர சண்டேஸ்வரர் எனவும், சக்தி கோயில்களில் தாரிகா சண்டேஸ்வரி எனவும் அழைக்கப்

படுவர். அதற்கேற்ப உருவங்களிலும் சில வேறுபாடுகள் காணப்படும். வழிபாட்டின் பூரண பலனைத் தருபவர் சண்டேஸ்வரரே. முதற் பூஜை விநாயகருக்கு அமைவது போல இறுதிப் பூஜை இவருக்குரியது.

வீரபத்திரர், விஷ்ணு ஆகியோர்க்குத் தனியான சந்நிதிகள் அமைக்கப்படுவதில்லை யெனினும் ஸ்தூபி, கோபுரம் முதலியவற்றில் இவர்களின் திருவுருவங்கள் இடம்பெறும். இவர்களுக்குத் தனித்தனியே ஆலயங்கள் அமைவதுண்டு.

விஷ்ணு ஆலயங்களில் பாலகிருஷ்ணர், பூதேவி ஸ்ரீதேவி சமேத மஹாவிஷ்ணு, பாமா ருக்மணி சமேத ஸ்ரீகிருஷ்ணர், பாம்பணையிற் பள்ளி கொண்ட ஸ்ரீரங்கநாதர் ஆகிய பலவித மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. இவை தவிர முருகப் பெருமானின் வேல் போல, மஹா விஷ்ணுவின் சக்கராயுதமும் தனியே பிரதிஷ்டை செய்யப்படுவதுண்டு. சக்கராழ்வார் என இது சொல்லப்படும்.

ஐயனார் முதலிய தெய்வங்களுக்கும் தனியான ஆலயங்கள் அமைவதுண்டு. ஹரிஹர புத்திரராகிய சாஸ்தாவை ஐயப்பன் என்றும், ஐயனார் என்றும் சொல்வர்.

மூல மூர்த்தியாக விநாயகர், சிவன், சக்தி, சுப்பிரமணியர், பைரவர், விஷ்ணு என்போர் அமைவதற்கேற்ப பலிபீடத்தருகில் வைக்கப்படும் பசுவானது, முறையே மூஷிகம், நந்தி, சிம்மம், மயூரம், நாய், கருடாழ்வார் என அமையும். சக்தி ஆலயங்களில் சிம்மத்திற்குப் பதிலாக நந்தி அமைவதுமுண்டு.

மூலஸ்தானத்திலும் பரிவார சந்நிதிகளிலும் ஸ்தாபிக்கப்படும் இத்தகைய திருவுருவங்கள் பெரும்பாலும் சிலாவிக்கிரகங்களாக (கருங்கல்லினால் செய்தவை) இருக்கும். வேல், சூலம் முதலியன உலோக வார்ப்புக்களே. இவற்றைவிட உற்சவங்களுக்குப் பயன்படுத்தும் மூர்த்திகள் உலோகங்களினால் செய்யப்படுகின்றன. தாம்ர விக்கிரகங்கள் என்று சொல்லப்படும் இவை தங்கம், வெள்ளி, செம்பு, பஞ்சலோகம் முதலியவற்றால் உருவாக்கப்படும். உற்சவங்களுக்குப் பயன்படுவதால் இவை உற்சவ மூர்த்திகள் அல்லது எழுந்தருளிகள் என அழைக்கப்படுகின்றன.

யோக மார்க்கத்திலே நமது உடலிலே உள்ள ஆறாதாரங்கள் பயன்படுமாற்றை முன்பு கூறினோம். இவை சக்கரங்கள் எனக் கூறப்படுவதுண்டு. இவற்றைப் பௌதிக நிலையில் உருவமைத்தது போல, உலோகத் தகடுகளில் சில வரிவடிவத் தோற்றங்களை எழுதி இறைவனது அருட்சக்தியை வெளிப்படுத்தும் ஒரு சாதனமாகப் பயன்படுத்தும்போது இவை யந்திரங்கள் அல்லது சக்கரங்கள் எனப்படும்.

ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு விதமான யந்திரங்கள் அமையும். இவை தங்கம், வெள்ளி அல்லது செப்புத் தகட்டில் வரையப்படும். யந்திரங்களை விக்கிரகங்கள் போல வெளியே வைத்துப் பூஜிப்பதுமுண்டு. உரிய முறைப்படி பூஜித்து, ஜபித்து உருவேற்றிய பின் கும்பாபிஷேகத்தின் போது பீடத்தில் மூர்த்தியை ஸ்தாபிக்குமுன் இந்த யந்திரத்தை ஸ்தாபித்து அதன் மேல் மூர்த்தியை ஸ்தாபிப்பதுமுண்டு. இந்த யந்திரங்களில் பீஜாக்ஷரங்கள் எனப்படும் மந்திர எழுத்துக்கள் சிலவும் இடம்பெறும்.

யந்திரங்களில் மேலானதும் பிரசித்தி பெற்றதுமான ஸ்ரீராஜராஜேஸ்வரி யந்திரத்தை ஸ்ரீசக்ரம் என்று சிறப்பித்துக் கூறுவர். இது தகட்டிலே வரைந்து பயன்

படுத்தப்படும்போது 'பூப்ரஸ்தாரம்' எனக் கூறப்படும். முப்பரிமாணத் தோற்றத்தில் இதன் முழு அமைப்பும் வெளித்தெரியும் படி விக்கிரகங்களைப் போல வார்த்து உருவாக்கும் போது இதை மேருப்ரஸ்தாரம் என்பர். இந்த யந்திரத்திலே அம்பிகையை ஆராதிக்கும் ஸ்ரீசக்கர பூஜையானது மிகவும் சிறப்பான ஒன்று.

ஆலயங்களில் பல்வேறு விதமான வாகனங்களையும் நாம் காண்கின்றோம். ஆன்மாவைப் பதி செலுத்தி நிற்கிறது என்பதையும், இறையுணர்வை ஆன்மா தாங்கியிருக்க வேண்டும் என்பதையும் வாகனங்களில் தெய்வத் திருவுருவங்கள் ஏறிவரும் காட்சி குறிப்பதாகக் கொள்ளலாம். ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு வாகனம் சிறப்பாகக் கூறப்படுகிறது. வாகனங்கள் மரத்தினால் செய்யப்பட்டு மக்கு முதலியவற்றால் சீர் செய்யப்பட்டு வர்ணங்கள் பூசி அழகுபடுத்தப்படுகின்றன.

இதேபோல சூரன்போர் முதலிய புராண நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டும் சடங்குகளுக்குரிய சூரன், கஜமுகாசுரன், யமன் போன்ற உருவங்களும் செய்யப்படுகின்றன.

இவ்வகையில், திருவுருவங்கள், வாகனங்கள், யந்திரங்கள் முதலியவை உள்ளடக்கிய திருக்கோயில்கள் தாம் நமது சைவக்கிரியைகளின் அடித்தளமாக அமைகின்றன. தெளிவான சிந்தனையுடன் நமது சைவாலயங்களின் அமைப்பு, நோக்கம், தத்துவார்த்த உட்பொருள் முதலியவற்றைப் புரிந்து கொண்டு கிரியைகளைப் பற்றி ஆராயப் புகுந்தால் அவற்றின் சிறப்பை மேலும் உணரலாம்.

*நன்றி: சைவ விரதங்களும் விழாக்களும்*
*கோப்பாய் சிவம்*

**தேரின் தத்துவம்**

தேரின் அமைப்பு அண்டபிண்டத்திற்குச் சமானம் விசுவ விராட் சொரூபமே எட்டு அடுக்குகளாகும்.

உச்சியிலிருக்கும் கும்பம் சோடசாந்தம். அதற்கடுத்தக் கீழடுக்கு துவாதசாந்தம். அதற்கடுத்தது மஸ்தக ஆதிஸ்தானம். அதற்கடுத்தது மஸ்தக மத்தியஸ்தானம். அதற்கடுத்தது மஸ்தக அந்தஸ்தானம். அதற்கடுத்தது புருவ மத்தியஸ்தானம். நடுவில் தாங்கும் குத்துக் கால்கள் தத்துவக் கால்கள். முன்மூன்று துரைகள் மூன்று கண்கள். பின்னவை சிகையும், இட வலக் காதுகளுமாகும். இறைவன் எழுந்தருளியிருக்கும் கேடைய பீடம் முப்பாழ். குதிரைகள் சூரிய - சந்திர கலைகள். சாரதி அக்னி கலை. இவை நாசியாகும் அடுத்த அடுக்கு கண்ட ஸ்தானம் அதையடுத்த அடுக்கு இருதய ஸ்தானம் அதையடுத்த அடுக்கு நாபி அதற்கு அடுத்த அடுக்கு குண்டலி ஸ்தானம். பத்துச் சக்கரங்களும் தசவாயுக்கள். இறைவன் இதற்கு கர்த்தா தானொருவனே என்றுணர்த்தி, இவ்வாறமைந்த பிண்ட தத்துவ சரீரமாகிய இரதத்தில் உள்ள தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்ற மனத்தை உந்திரகுண்டலியிலிருந்து நாபிக்கும் அதிலிருந்து கண்டத்திற்கும், அதிலிருந்து வாய்க்கும் ஏற்றி, வயப்படுத்தி, முறையே இரதக்குதிரையாய நாசிக்கும், அங்கிருந்து கண் வழியாகவும் நடுவழியாகவும் மேல்நோக்கி ஆறும் அடுக்காகிய புருவமத்திக்கும் ஏற்றி, லயப்பட்டு சும்மா இருந்தபடியிருக்கும் நித்தியசுகியாய் இருந்திடல் வேண்டும் என்ற வைராக்கியத்தைக் காட்டுகிறது.

மேலும் தேர், திரிபுராதிகளைச் சிவன் சிரித்து எரித்து ஆன்மகோடிகளைக் காப்பாற்றிய ஸ்திதி, தொழிலுக்கும் அறிகுறியாகிறது.

# திருவரங்கம்

திருமதி. தேவகுமாரி ஹரன்
சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்

ஆழ்வார்கள் பாடிய 108 தலங்களில் தலை சிறந்ததாகக் கருதப்படுவது திருவரங்கம். இது பூலோக வைகுண்டம் என்றும் ஞான மண்டபம் என்றும் பெரியகோயில் என்றும் வைணவர்களால் போற்றப்பட்டது. திருமால் எழுந்தருளியிருக்கும் 108 தலங்களுள் முதன்மையானது. ஆழ்வார்களால் மங்களாச னம் செய்யப்பட்ட இத்தலத்தினை வட நாட்டவர்களும் புண்ணியதலமாகக் கருதி வழிபடுகின்றனர்.

ஸ்ரீ ரங்கமகாத்மியம் என்னும் திருவரங்கத்தலபுராணம், கோயிலொழுகு, நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் ஆகியன திருவரங்கத்தின் வரலாற்றினையும் பெருமை யையும் செப்புகின்றன. இத்திருக்கோயிலின் கண் அரங்கன் துயில் கொண்டுள்ள கோலத்தில் காட்சி தருகின்றார். இவர் அழகிய மணவாளன் அரங்கன், அரங்க நாதன், பெரியபெருமாள் முதலான பெயர் களாலும் அழைக்கப்படுகின்றார். இத்திருக் கோயிலில் ஏழு திருச்சுற்றுக்களும் 21 கோபுரங்களும் உள்ளன. கருவறையைச் சூழ்ந்துள்ள சுவர்நீங்கலாக இங்கு 7 பெருமதில்கள் உள்ளன. ஆசியாவிலே மிகப்பெரிய கோபுரம் என்னும் பெருமைக் குரிய தெற்குவாயில் இராசகோபுரம் திருவரங்கத்திற்கு புதிய அழகினைத் தந்துள்ளது. அச்சுதராயரால் கி.பி 16 ஆம் நூற்றாண்டு தொடங்கப்பட்டு 400 ஆண்டு களாக மொட்டைக் கோபுரமாகத் திகழ்ந்த இதனைக் கட்டிய பெருமை அகோபிகா மடத்துச் சீயர் பெருமான் தவத்திரு அழகிய சிங்கரைச் சாரும். திருவரங்கத்தில் திரு மழிசையாழ்வார் மதுரகவியாழ்வார் சந்நிதி ஆண்டாள் ஸ்ரீரங்கநாச்சியார், தாயார் படிதாண்டாப்பத்தினி, இராமனுஜர் சந்நிதி முதலான 45 சந்நிதிகள் உள்ளன. 7 சுற்றுக் களையும் பிரகாரங்களில் 7 ஆவது பிரகார வீதி திருவீதி என்றும் சித்திரை வீதி என்றும் 6ஆவது பிரகார வீதி, திரிவிக்கிரமவீதி என்றும் ஐந்தாவது பிரகாரவீதி, அகளங்கன் திருவீதி என்றும் அழைக்கப்படும். ஐந்தாம் பிரகாரத்தின் தென்புற கோபுரவாயில் நான்முகன் கோபுரவாசல் எனப்படும். இதன் கோபுரம் 4 திக்குகளையும் நோக்கி நான்கு முகங்களைக் கொண்டுள்ளதால் அப்பெயர் பெற்றுள்ளது. இந்தக் கோபுரத்தைத் தாண்டியதும் திறந்த வெளியில் நான்கு கால் மண்டபம் அமைந்துள்ளது. அதற்கு முன்னால் இரங்கவிலாச மண்டபம் காணப் படுகிறது. இது திருமலை நாயக்கர் திருப்பணியாகும். இம்மண்டபத்தின் முகப்பில் அரங்கநாதன் கோயில் கொண்டி ருக்கும் தத்துவத்தை சுதைசிலைகள் மூலம் விளக்கியுள்ளார்கள். இம்மண்டபத்திற்கு மேற்கே சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கிருஷ்ணன் கோயில் இருக்கிறது. நாதமுனிவர் ஆழ்வாராதியர் ஆகியோர் சந்நிதிகளும் இம்மண்டபத்தைச் சுற்றி அமைந்துள்ளன.

இரங்கவிலாசத்தைத் தாண்டியதும் அகளங்கன் வீதிச் சுற்றுள்ளது. வீதியின்

தென்மேற்கு மூலையில் சக்கரத்தாழ்வார் சந்நிதியும் வடமேற்கில் ஸ்ரீரங்கநாச்சியாரும், தாயார்படிதாண்டாப் பத்தினியின் தனிக் கோயில்களும் உள்ளன. தாயார் சந்நிதியைத் தாண்டினால் கம்பர் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் தான் கம்பர் இராமாயணத்தை கி.பி.885 இல் அரங் கேற்றினார் என்பர். ஆயிரங்கால் மண்டபம் தாயார் சந்நிதியின் கிழக்கே உள்ளது. 500 அடி நீளமும் 160 அடி அகலமும் கொண்டு 951 தூண்கள் தாங்கும் மண்டபமாக இது விளங்குகிறது. இதன் நடுவே நாற்சதுரமான திருமாமணி மண்டபம் விளங்குகின்றது. இம் மண்டபத்தில் அத்யயன உற்சவம் நடைபெறும். வெள்ளைக்கோபுர வாயிலின் அருகில் சேக்ஷராயர் மண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தின் தூண்களில் புலிகளை வேட்டையாடும் வீரர்கள் குதிரைமேல் ஆரோகணித்து போர்புரியும் காட்சி அதியற்புதமாக செதுக்கப்பட்டிருக்கின்றது.

இராமானுஜர் சந்நிதி தென்கோடியில் இருக்கின்றது. ஆதியில் இது அரங்கன் மண்டபமாக இருந்தது. இராமானுஜர் கால மானவுடன் இவரது திருமேனியை அரங்கன் ஆணைப்படி பூதவுடலுடன் இருத்தி விட்டனர். இச்சந்நிதியில் இராமானுஜர் சரித்திரம் சித்திரமாக வரையப்பட்டுள்ளது. நான்காம் பிரகாரத்தில் கருடமண்டபத்தையும் இம்மண்டபத்தில் பெருமானை நோக்கியபடி அஞ்சலி ஹஸ்தராய் கருடாழ்வாரையும் காணலாம். 3ம் பிரகாரத்தில் கொடித்தம்பம் பரிமண்டபம் ஆகியவற்றையும் ஜோலோத்தசவ மண்டபத்தையும் காணலாம். வடகிழக்கு மூலையில் தர்மவர்மன் எடுத்த விஸ்வக்க்ஷேனர் சந்நிதி விபிசணன் ஆஞ்ச நேயர் அர்ச்சனமண்டபம் சேரகுலவல்லி சந்நிதி முகமதிய நாச்சியார் ரேவதி மண்டபம் கிளி மண்டபம் ஆகியன உள்ளன.

ஸ்ரீரங்கநாதனின் வாயிலில் அழகிய மணவாளன் மண்டபம் உள்ளது. இங்கு படியேத்த உற்சவம் நடைபெறும். சந்நிதி வாயிலிற்கெதிரே தாமிரகருடன் எழுந் தருளியுள்ளான். இதற்கு மேற்குப் பக்கத்தில் நாற்புறமும் கண்ணாடிகள் பதிக்கப்பட்ட கண்ணாடி அறை இருக்கிறது. பிரமோற்ச காலங்களில் உற்சவர் இங்கே எழுந் தருளியிருந்து காட்சியளித்தார். சந்நிதி வாயிலைத் தாண்டியதும் 24 தூண்கள் கொண்ட காயத்திரி மண்டபமும் இம்மண்டபத்திற்குப் பின்னால் சைத்திய வடிவங் கொண்ட கர்ப்பக்கிரகமும் உள்ளன. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றியுள்ள நடைச் சுற்றுக்கு தர்மவர்மவீதி என்று பெயர். முதல்சுற்றுப் பிரகாரத்தின் நான்கு மூலை களில் யோகவராகர், யோகநரசிங்கர், யோகஅனந்தர், நாபிநளினர் ஆகியோர் விமானக் காவலர்களாய் விளங்குகின்றனர். பிரகாத்தொடக்கத்தில் இறையகத்தின் பின்புறம் வலக்கரையிலுள்ள கோக்ஷ்டத்தில் தும்பிக்கையாழ்வாரும் இடதுகோரியில் அரங்கனின் யோகமாயையான துர்க்காதேவி யும் காப்பு செய்கின்றனர். வட்டவடிவ இறையகத்தின்மேல் அர்த்தகோள வடிவில் பொன்வேயப்பட்ட ரங்கவிமானம் இருக்கின்றது. பொன்வேந்த பெருமாள் என்ற சுந்தரபாண்டியன் இதை 13ஆம் நூற்றாண்டில் செய்தான் என்கிறார்கள். இரங்கவிமானம் ஓம் என்ற பிரணவ வடிவத் தில் இருப்பதாக ஐதீகம். விமானத்தின் நான்கு முகப்புக்களிலுள்ள சிறிய கோபுரங்கள் நான்கு வேதங்களைக் குறிக்கும். மேலேயுள்ள தூபிகள் சாஸ்திரங் களைக்குறிக்கும்.

மூலவர் அரங்கநாதன் தென்திசை இலங்கையை நோக்கி ஆதிசேக்ஷன் மீது பள்ளி கொண்டுள்ளார். மூலவருக்கு

முன்னால் அழகிய மணவாளன் என்ற உற்சவமூர்த்தி தேவியருடன் காட்சி யளிக்கின்றார். அரங்கத்திலே பள்ளி கொண்டுள்ள மூர்த்திக்கு தர்மவர்ம என்ற சோழ அரசன் மண்டபம், விமானம், புஷ்கரணி, மதில் ஆகியவற்றோடு கூடிய ஆலயம் ஒன்றினை அமைத்தான். இவ்வரசன் காலத்தில் எது என்று கூறுவதற்கில்லை. காலப்போக்கில் காவேரியில் ஏற்பட்ட வெள்ளம் ஆலயத்தை மணலால் மூடிவிட் டது. கிள்ளி என்ற சோழ மரபில் வந்த கிளிச்சோழன் இக்கோயிலை அமைத்ததாக கோயில் ஒழுகு கூறும். பின்னர் 2ம் இராஜேந்திரதிருச்சோழனின் மகனாகிய இராசமகேந்திரன் 2ம் திருச்சுற்று மதிலைக் கட்டினான். இது இராசமகேந்திரன் திருவீதி எனக் கூறப்படும். கோயிலுக்கு திருமங்கை மன்னன் விக்கிரமசோழன் முதலாம் சடையவர்மன், சுந்தரபாண்டியன், முதலாம் குலோத்துங்சோழன், விஜயநகரத்தார், தஞ்சைமதுரை நாயக்கர் ஆகியோர் திருப் பணிகள் புரிந்துள்ளனர். திருவரங்கக் கோயில்களில் பல சிற்பங்களும் செப்புத் திருமேனிகளும், மரப்பாவைகளும், தந்தச் சிற்பங்களும், ஓவியங்களும் காணப் படுகின்றன.

திருவரங்கத்தில் ஆண்டு தோறும் விழாக்களும் சிறப்புவழிபாடுகளும் நடைபெறும். இவற்றுள் கோடைதிருநாள் ஸ்ரீநவமி, சித்திரைப்பிரமோற்சவம், வைகாசி வசந்தோற்பவம், ஆனி பவித்திரோற்சவம், நவராத்திரி, ஐப்பசிதிருமஞ்சனம், வைகுண்ட ஏகாதசி, தெப்பத்திருவிழா ஆகியன குறிப்பிடத்தக்கதாகும். மார்கழியில் நடைபெறும் வைகுண்டஏகாதசியின்போது சொர்க்கவாசல் திறப்பது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

**வாரியார் சுவாமிகளின் வாக்கு**

- பிறர் குற்றத்தை மன்னித்து விடுவது மனிதத் தன்மை. மறந்து விடுவது தெய்வத் தன்மை.
- படிப்பாலும், பணத்தாலும் கடவுளைக் காண முடியாது. பக்தியினால் தான் கடவுளைக் காண முடியும்.
- தனக்குள்ளேயே கடவுள் இருக்க சிலர் தரணியெங்கும் கடவுளைத் தேடுகிறார்கள்.
- எந்த நேரம் இறைவனுடைய திருநாமம் நினைக்கப்படுகிறதோ அது நம்முடைய நேரம். எது தருமத்தில் செலவழிந்ததோ அது நம்முடையது.
- உண்மையே பேசுக நன்மையே பேசுக
- அன்பாகப் பேசுக நிதானமாகப் பேசுக
- இனிமையாகப் பேசுக ஆழமுடையதாகச் சிந்தித்துப் பேசுக
- சமயம் அறிந்து பேசுக சபை அறிந்து பேசுக
- நாம் நினைக்கின்ற தூய நினைவுகள் மற்றும் தீய நினைவுகள் காற்றில் அலைகளாகச் சென்று மீண்டும் நம்மிடமே வந்து ஒடுங்குகின்றன. நாம் எண்ணிய தீய எண்ணங்கள் நமக்கே தீங்கையும் நல்ல எண்ணங்கள் நல்லவற்றையும் செய்யும்.

## மாவட்டங்களில் இடம்பெற்ற தைப்பொங்கல் விழா
















Printed by Kumaran Press (Pvt) Ltd.
kumbhlk@gmail.com